Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/984)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 01 செவ்வாய்க்கிழமை (18.10.2011) பக்கங்கள் 16 ஓசை – 18


கணினியால் காணாமல் போனவை
11


குட்டிச் சம்பியன்
06


அரசியல் நல்ல வியாபாரம்
03


சமூகத்திற்கு விளங்கும் மொழியில்...
05

## யுத்தத்தின் பின் சமாதான மொழி

நாட்டு மக்கள் யுத்தத்தின் பினனரான காலப்பகுதியில் சமாதான மொழியை பேசுகின்றார்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு தாஜ்ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற மொழி மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் - தவபாலசிங்கம் மீதான தாக்குதலை ஈழமக்கள் ஜனநாயக்க கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மீதான கோழைத்தனமான தாக்குதலை ஈ.பி.டி.பி வன்மையாகக் கண்டித்துள்ளது. தாக்குதல் சம்பவத்துடன தொடர்புடைய குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# புலிகளின் பரப்புரைக்குள் வீழ்ந்துவிட்டது கனடா



## தூதுவர் சித்ராங்கனி குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பரப்புரைக்குள் கனடா வீழ்ந்துவிட்டதாகக் கனடாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரா குற்றம் சாட்டியுள்ளார். போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கனேடிய ஊடகங்களை தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரா ஒட்டாவாவில் சந்தித்தபோது அளித்துள்ள செவ்வியில், கனடாவின் இந்த அறிக்கைகள் தொடர்பாக தாம்கவலை கொள்வதாகவும், உண்மையான நிலைமைகளை கனடா அறிந்து கொள்ளவேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் கூறியுள்ளார். இலங்கையில் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும், ஐரோப்பாவில் அதன் அரசியல் பிரிவு இன்னமும் பலமாக - உயர்ப்புடன் உள்ளது. அதன் பரப்புரை இயந்திரம் வலுவாக செயற்படுகின்றது.

அனைத்துலக அளவில் இலங்கை அரசுக்கு எதிரான நிலையை தோற்றுவிக்க புலிகள் பரப்புரைப் போர் ஒன்றைத் தொடுத்துள்ளனர். புலிகள் பல்வேறு வடிவங்களில் இருக்கின்றனர். கனடா புலிகளுக்கு அங்கீகாரம் அளிக்க வில்லை எனக் கூறியுள்ள அவர், கனடா இந்த விடயத்தில் விழிப்புடன் இருந்து நிலைமைகளை அவதானிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மாணவ தலைவர் மீதான தாக்குதல் யாழ். பல்கலையில் எதிர்ப்புப் போராட்டம்

## கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை விரிவுரைகள் பகிஷ்கரிப்பு



யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மீதான தாக்குதலைக் கண்டித்து மாணவர்கள், விரிவுரைகளைப் பகிஷ்கரித்து கண்டனக்கூட்டம், ஆர்ப்பாட்டம் என எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர். நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ். பல்கலைகழக வளாகத்தில் ஒன்றுகூடிய யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முதலில் மேற்குறித்த சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவித்து கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தியதுடன் சம்பவத்தைக் கண்டிக்கும் மூன்று பக்க அறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர்.

அவ்வறிக்கையில் ஒவ்வொரு தமிழ் மாணவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்பட வேண்டும், மாணவ ஒன்றியத் தலைவரைத் தாக்கியவர்களை உடன் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும், மாணவர் ஒன்றியத் தலைவரின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திற்கு அருகில் படையினரின் காவலரண் உள்ளது. எமது பாதுகாப்பிற்கு இல்லாத (15ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு நடத்திய உண்ணாவிரதம் பழ ரசத்துடன் நிறைவுக்கு வந்தது



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுக் காலை 7 மணியளவில் ஆரம்பமான அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மாலை 4 மணியுடன் நிறைவுக்கு வந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லைக்களை (15 ஆம் பக்கம் பார்க்க)

# முறையான அறிக்கைக்கு முன்னர் எந்தவொரு பகுதியும் வெளிவராது

## நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆனைக் குழுவின் அறிக்கை அடுத்தமாதம் முறையாக வெளியிடப்படும் வரை அதன் எந்தவொரு பகுதியும், வெளியில்வராது என நல்லிணக்க ஆனைக்குழு நேற்றுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆணைக் குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷமன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை அடுத்த மாதத்தின் இரண்டாவது வாரத்தில் கையளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிட்ட பின்னரே அரசாங்கத்துக்கு எதிரான போர்க்குற்றம் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளை ஆராயவுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்தது.

அதேவேளை, உண்மைகளைக கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அடுத்த வருடம் மார்ச் மாதம் நடை (15 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலியில் மீள்குடியேற்றம் நேற்றைய தினம் ஆரம்பமானது



கடந்தகால போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த கிளாலி கிராம மக்களை மீளவும் அவர்களின் சொந்த இடத்தில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கை நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் முகுநதன் தலைமையில் நேற்றுக்காலை பத்து மணியளவில் நடந்த இந்த நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் கலந்துகொண்டு மீள்குடியேற்ற நடவடிக்கைக்கையினை ஆரம்பித்து வைத்தார்.

கிளாலியில் மீள்குடியேறுவதற்காக உள்ள 230 குடும்பங்களில் 165 குடும்பங்கள் தமது பதிவுகளை மேற்கொண்டன. இந்தக் குடும்பங்களுக்கு மீள்குடியேற்றக் கொடுப்பனவாக ஐயாயிரம் ரூபாவும், தகரம், தறப்பாள் மற்றும் கோடரி, கத்தி போன்ற பொருட்களும் வழங்கப்பட்டன.

கிளாலி கிராம மீள்குடியேற்றத்தை அடுத்து விரைவில் இத்தாவில், முகமாலை வேம்பொடு கேணி பகுதிகளில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட வுள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சந்திரகுமார் எம்.பி. மீள்குடியேறியுள்ள மக்களுக்கான ஆரம்பக்கட்ட அடிப்படை வசதிகள் தற்போது ஏற்படுத்திக்கொடுக்கப்படும் குறிப்பாக விரைவில் பாடசாலையினை ஆரம்பிப்பதற்கும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கிராமத்தை துப்பரவு செய்வதற்கான காசுக்கான வேலையும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

எனவே மக்களும் நம்பிக்கையோடு தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் அதற்காக நாம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். போதனா வைத்தியசாலையில் திருத்தப்படாத எக்ஸ்ரே இயந்திரம்

## - அவதிக்குள்ளாகும் வெளிநோயாளர்கள் -

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் எக்ஸ்ரே இயந்திரமொன்று கடந்த 2 வாரமாக பழுதடைந்திருப்பதன் காரணமாக கிளினிக் பிரிவு நோயாளர்கள் எக்ஸ்ரே எடுக்கமுடியாமல் திருப்பி அனுப்பப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையின் எக்ஸ்ரே பிரிவில் 3 எக்ஸ்ரே இயந்திரங்கள் இயங்கி வருவதாகவும், அதில் நல்ல நிலையில் இருந்த இயந்திரமொன்றிலேயே பழுது ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதிகள்ில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளரும் அவசர சிகிச்சைப் பிரிவு நோயாளர்களுமே எக்ஸ்ரே எடுக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாகத்தினரால் குறித்த இயந்திரத்தை திருத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் நேற்றுவரை அவ்இயந்திரம் பழுதுபார்க்கப்படவில்லை.

மேலும் எஞ்சியிருக்கும் எக்ஸ்ரே இயந்திரங்கள் மூலமாக அனைத்துப் பிரிவு நோயாளர்களுக்கும் எக்ஸ்ரே சேவையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### படகுகள் மீளளிப்பு

(வடமராட்சி)

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி பகுதிகளில் கடற்றொழில் செய்யும் மீனவர்களுக்கு இறுதி யுத்தத்தின்போது கைவிடப்பட்ட படகுகளை மீளக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு இராணுவ உயரதிகாரிகளினால் கப்பேந்தி மாதா ஆலய முன்றலில் வைத்து காலை 10 மணியளவில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் அம்பிகைபாகன், கட்டைக்காடு கிராம அலுவலர் செபமாலை தோமஸ் ஜுட், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ-116)

### விபத்து

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் பாடசாலை மாணவியும், தந்தையும் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் பிறவுண் வீதியைச் சேர்ந்த சுவஸ்திகா (வயது - 8), உதயகுமார் (வயது - 46) ஆகிய இருவரும் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி ஆவார்.

தற்போது பாடசாலை வீதிகளில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

### மின்சாரம் தாக்கியது

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் பலாலி விமான நிலையத்தில் சிற்றுண்டிச்சாலை வைத்திருக்கும் பத்மகுமார் (வயது - 35) என்ற குடும்பஸ்தரே தாக்குதலுக்கு இலக்கானார்.

குறித்த குடும்பஸ்தர் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

### மெய்வல்லுனர் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு பாடசாலைகளின் மெய்வல்லுனர் ஆரம்ப நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கே.சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-11)

### தீபாவளி வியாபாரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றம் தமது எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களை தீபாவளிப் பண்டிகையான எதிர்வரும் 26 ஆம் திகதி வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளித்துள்ளது.

அன்றைய தினம் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கடைகளைத் திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என வணிக மன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-11)

### ஆசிரியர், மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கு மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் செ.இராமச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (116)


சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு அனுசரணையுடன் UR Friend Foundation நிறுவனத்தால் நடாத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கான

**கட்டுரைப் போட்டி - 2011**

**நிபந்தனைகள் :-**

1. போட்டிகள் மூன்று பிரிவுகளாக தமிழ்மொழியில் நடைபெறும்.

**கனிஷ்ட பிரிவு (தரம் 6,7,8)**
தலைப்பு :- "சிறுவர் மகிழ்ச்சியில் சமூகத்தின் பங்கு"
500 தொடக்கம் 750 சொற்கள்

**இடைநிலைப் பிரிவு (தரம் 9,10,11)**
தலைப்பு :- "சமூகத்தில் சிறுவர்கள் நன்னிலை பெறுவதற்கான வழிகள்"
750 தொடக்கம் 1000 சொற்கள்

**சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**
தலைப்பு :- "யுத்தம் முடிவடைந்த நிலையில் தற்போதைய சிறுவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்"
1000 தொடக்கம் 1500 சொற்கள்.

2. ஆக்கங்கள் யாவும் சுயவிபரக் கோவையுடன் அனுப்பப்பட வேண்டும்.
3. போட்டிக்கான கட்டுரைகள் யாவும் மாணவனுடைய சொந்த ஆக்கம் என பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
4. கட்டுரைகள் 30.10.2011 இற்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.
5. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
6. யாழ்ப்பாணத்தில் 07.11.2011 அன்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சிறுவர் தின விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி
UR Friend Foundation
#92, Brown Road,
Jaffna.



மேலதிக தகவல் தொடர்புகளுக்கு
email: urfriendfoundation@yahoo.com
Tel: 0213734742
(R/050)


## நீதிமன்றச் செய்திகள்

### அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற ஆனைக்கோட்டை வாசி ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தினால் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை பொலிஸார் கைதுசெய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும், செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (உ-11)

### செலுத்தினார் அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 7500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபரை சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த மா. கணேசராசா குறித்த நபருக்கு 7500 ரூபா அபராதம் விதித்ததுடன் செலுத்தத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (உ-11)

### அரச அனுமதி இன்றி சாராய வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதிகளில் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த இரு நபர்களுக்கு எதிராக நேற்று யாழ். நீதிமன்றம் 8000 ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளித்துள்ளது.

கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதியில் யாழ். பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையிலேயே குறித்த இரு நபர்களும் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டனர்.

இவர்களுக்கெதிராக பொலிஸார் யாழ். நீதிமன்றத்தில் வழக்கினைப் பதிவுசெய்தனர்.

இவ்வழக்குகளை விசாரணை செய்த மாவட்ட நீதிபதியும், மேலதிக மாவட்ட நீதவானுமாகிய அன்னலிங்கம் பிரேம்சங்கர் குறித்த நபர்கள் இருவருக்கும் தலா 5000, 3000 ரூபா தண்டப்பணம் விதித்ததுடன், இத்தொகையைக் கட்டத் தவறின் முறையே 5, 3 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். (பா)


### சிக்னல் போடாதவருக்கு தண்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் வாகன ஒழுங்கு விதிமுறைகளை மீறி குறிப்பாக சிக்னல் காட்டாது சந்தியில் திரும்பிய குற்றத்துக்காக மட்டுவில் வாசி ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்த நபரை பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நபரிடம் ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிட்டதுடன் செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (உ-11)



யாழ். பொது நூலகத்தில் இலங்கைக்கு மீளத் திரும்புதல் என்னும் தொனிப்பொருளில் இடம்பெற்றுவரும் கண்காட்சியினை இந்தியத் துணைத் தூதுவர் வி. மகாலிங்கம் பார்வையிடுவதைக் காணலாம். பிரிட்டிஷ் கவுன்சில் ஏற்பாடு செய்துள்ள இக்கண்காட்சி நாளையுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம் : மாதங்கன்)

நாம் பிறவாத இடமோ, பேசாதமொழியோ, தோன்றாத குலமோ கிடையாது. எனவே எல்லா நாடும் நமது நாடே எல்லா மக்களும், நமது சகோதரர் என்று கருதி சாந்தமாகவும் அன்பாகவும் வாழ வேண்டும். - வாரியார் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நல்லதை நோக்கி நடப்போம்!

"தம்முடைய கலாசாரத்தின் சிறப்புகளையும், தம்முடைய வரலாற்றின் வெற்றிகளையும் பேசி ஆரவாரம் செய்வது அறிவுஜீவிகளின் வேலையாக இருக்க முடியாது" என்று குறிப்பிடுகிறார் பிரபல பலஸ்தீன அறிஞரான எட்வேர்ட் ஸெய்த். தேசியக் கருத்தியல்களில் ஊறி எளிமையான ஆத்திரங்களுக்கு எடுபட்டு, விமர்சன உணர்வை இழப்பதும் உணர்ச்சியடிப்படையிலான பொதுநீரோட்டக் கருத்துகளுக்கு 'ஆமாம்' போடுவதும் அவர்தம் இயல்பல்ல என்கிறார் அவர்.

ஆண்ட பரம்பரைக் கதைகளையும், பண்டைய மேன்மைகளையும் சொல்லி நடப்புலகைக் காணவிடாது இன்றும் நம்மைக் கனவுலகத்தில் மிதக்க வைத்துக் கொண்டிருப்பவர்களால் சாமானிய வாழ்க்கை எப்படிக் கதிகலங்கிப் போகும் என்பதைப் பார்த்துவிட்டோம்; பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீதிக்கும் சமத்துவத்துக்கும் கௌரவத்துக்குமான போராட்டம் என்பது இன்றைய சிக்கல்களையும் யதார்த்த நிலைமைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டதாகவே வடிவமைக்கப்பட வேண்டும். வெறும் உணர்ச்சிவசப்பட்ட விருப்பங்களை விசிறியடித்தபடியே இந்த சிக்கல்களைக் கடந்துவிட முடியாது.

தேசபக்தி ஆவேசங்களை அள்ளி விசிறி, இன்று மக்களைக் கஷ்டப்பட வைத்துக்கொண்டிருப்பவர்களும், அவற்றுக்கெல்லாம் எதிர்காலத்துக்கான ஒரு 'விடுதலை நியாயத்'தைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களும், தாங்கள் மக்களை ஏமாற்றவில்லை என்பதில் மனசாட்சிக்கு உண்மையாக இருக்கிறோமா என்பதைத் திரும்பவும் ஒருமுறை கேட்டுப் பார்த்துக் கொள்ளவேண்டும். எந்த நம்பிக்கையில் மக்களைத் தொடர்ந்து கஷ்டப்பட வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தமக்குள்ளாகவேனும் பலமுறை விசாரித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

மக்களின் இன்றைய கஷ்டங்களை மாற்றும் எத்தனங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, 'அது நடக்காத அலுவல்' என்ற முடிந்த முடிவுக்குள் தள்ளிவிட்டு, புதிது புதிதாய் கஷ்டங்களைக் கண்டுபிடித்துப் பிரலாபம் வைத்துக் கொண்டிருப்பதையே அரசியலாய்ச் செய்துவருவது சரிதானா? ஏதோ புதையல் கண்டுபிடிப்பது போல புதிது புதிதாய்க் குற்றங்களைக் கண்டுபிடித்து அடுக்குவதன் மூலம், அரசியல் தேவைக்கும் அவரவர் காட்ட விரும்பும் 'மனிதாபிமான – முற்போக்கு முகத்தின்' தேவைக்கும் பயன்படுத்திக் கொள்ளலாமே தவிர, சேர வேண்டிய இடத்திற்கு மக்களை – சமூகத்தை அழைத்துச் சென்றுவிட முடியாது. இந்த உண்மையை கொஞ்சம் யோசித்தால் வரலாற்றிலிருந்தும் இதர அனுபவங்களிலிருந்தும் நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

தங்களது ரோசத்திற்கும், எதிர்பார்ப்புகளுக்கும், வீம்புகளுக்கும் ஏற்ப மட்டுமே தீர்வு வரவேண்டும் என்று அழுத்தமான பிடிப்போடு இருப்பவர்கள், அந்த லட்சியம் தவிர வேறெதுவும் முக்கியமல்ல என்று நினைக்கின்றவர்கள் அடிப்படையில் சுயநலவாதிகள்தான். அவர்களிடம் எல்லையற்ற அகந்தையே நிறைந்து கிடக்கிறது. அதனாலேயே சாதாரண மக்களின் இயல்பு வாழ்வுக்கான சமரசங்களை செய்துகொள்ள மறுப்பவர்களாயிருக்கிறார்கள். இது தங்களது இலட்சியங்கள், வேட்கைகளுக்காக சாதாரண மக்களைக் கஷ்டப்பட வைக்கவும் பலிகொடுக்கவும் தயங்காத தீவிரவாதமாக மாறிவிடுகிறது.

அரசை விடாமல் திட்டியபடியே இருந்தால், யாராவது வந்து நம் பிரச்சினைகள் எல்லாவற்றையும் சரிசெய்து விட்டுப் போவார்கள் என்று சில அரசியல்வாதிகள் வாக்குகளுக்காக ஏமாற்றிக் கொண்டிருப்பது போல, சமூகத்தின் சிந்திக்கும் தரப்பும் கையாலாகாத்தனக் காத்திருப்பிற்குத் தூண்டக்கூடாது. இந்த நாட்டையும் மக்களையும் மேலும் பாழ்படுத்தாது, காப்பாற்றுவதிலும் முன்னேற்றுவதிலும் அக்கறை இருக்கக் கூடிய அனைத்துத் தரப்பினரும் இறங்கி, செயற்படும் தளத்தில் சந்தித்துக் கொள்ளவேண்டிய தருணம் இது.

எல்லோரும் இதுவரை சென்ற பாதைகளிலிருந்து திரும்பி வந்து, நம் அனைவரினதும் எதிர்காலத்திற்காக நாம் இணைந்து செல்ல வேண்டிய புதுப் பாதையைத் தெரிவுசெய்துகொள்ள வேண்டிய வாய்ப்பை மீண்டுமொரு தரம் தவற விடுவதும் மீண்டும் மீண்டும் வருத்தப்படுவதுமாகத் தொடர வேண்டாம். பழைய முரண்களைப் பேசிப் பேசியும், பழைய ஆவேசங்களைக் கைவிடாமலும் பகைவெறுப்பை வளர்த்து போலி விடுதலை நம்பிக்கைகளை ஊட்ட வேண்டாம். சொல்லொணாப் பாடுகள் அனைத்தும் பட்டு, வாழ்விழந்து நொந்து அல்லலுறும் அப்பாவி மக்களின் பேரால் அவற்றை மறந்துவிடுவதற்கு ஒவ்வொருவரும் தயாராக வேண்டும்.

- ஆசிரியர்

# இலாபகரமான வியாபாரமாக அரசியல் மாற்றமடைந்துள்ளது



(கொழும்பு)

நாட்டில் மிகவும் இலாபகரமான வியாபாரமாக அரசியல் மாற்றமடைந்துள்ளது:

நாடாளுமன்றில் கொள்ளையர்களும், கொலைகாரர்களுமே அதிகம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநயாக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வித்துறையின் மூலம் இந்தச் சமூகத்தை சீர்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது, அவ்வாறு இல்லாவிட்டால் இந்தச் சமூகம் சீரழிந்துவிடும். நாட்டின் வளங்களைக் கொள்ளையிடுவதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றனர். நாட்டில் மிகவும் இலாபகரமான வியாபாரமாக தற்போது அரசியல் மாற்றமடைந்துள்ளது. தந்தை, மகள், மாமி, மாமா மற்றும் மகன் என குடும்பத்தின் அனைத்துத் தரப்பினரும அரசியலில் ஈடுபடுவதற்கு போராடுவதாக சந்திரிக்கா பண்டாரநயாக்க குறிப்பிட்டுள்ளார்.

# சட்டத்துறைத் திருப்பங்களை விளக்க இலவச சட்ட ஆலோசனை அறிவூட்டல்

(கொழும்பு)

சட்டத்துறையின் புதிய திருப்பங்களை பொது மக்களுக்கு தெளிவுபடுத்தும் இலவச சட்ட ஆலோசனை அறிவூட்டல்களை வழங்க நீதி அமைச்சின் சட்ட உதவி ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இந்த இலவச உதவிகளை வழங்க சட்ட உதவி ஆணைக்குழு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரனையுடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்த அறிவூட்டல் திட்டம் மட்டக்களப்பு அமிர்தகழி சிறிசித்தி விநாயகர் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட கிளை இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விவாகரத்து, தாபரிப்பு பிணக்குகள்,குடும்ப வன்முறை, சிறுவர் மற்றும் முதியோர் உரிமைகள் உட்பட பிறப்பு - இறப்பு பதிவுகள் என்பனவும் பொது மக்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

இந்தச் சட்ட உதவி தெளிவூட்டல் நடமாடும் சேவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்தப்படுகின்றமை, சட்டத்தின் புதிய திருப்பங்கள் இலகுவாக பொது மக்கள் அறிந்து கொள்ள வசதியாக அமையும் என நீதி அமைச்சு தெரிவிக்கின்றது.

இதேவேளை மாதாந்தம் எண்ணாயிரம் ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் சட்ட உதவி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் காணி, விவாகரத்து,தாபரிப்பு, விபத்து, பணம் கொடுக்கல் வாங்கள் பிணக்குகள் போன்ற விடயங்கள் தொடர்பில் சட்ட உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

# கொரிய நாட்டவர்களான தாயும் மகனும் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு நாணயங்கள், தங்கக்கட்டிகள், தங்க நாணயக் குற்றிகள் மற்றும் தங்க ஆபரணங்களை மலேசியாவுக்கு கடத்த முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொரிய நாட்டைச் சேர்ந்த தாயும் மகனும் பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

வெளிநாட்டு நாணயங்கள் 2.6 மில்லியன் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளதுடன், தங்கத்தின் பெறுமதிகுறித்து இதுவரையில் கணக்கிடப்படவில்லையென சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கருத்தடை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

ஏழாலைப் பிரதேசத்தில் வளர்ப்பு பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை இன்றும் நாளையும் காலை 9மணி முதல் பிற்பகல் 1 மணிவரை இடம்பெறவுள்ளது.

இன்று ஏழாலை வடக்கு திவ்யா முன்பள்ளியிலும், நாளை ஏழாலை மத்தி கண்ணகி சன சமூக நிலைய மண்ட பத்திலும் இச்சத்திர சிகிச்சை நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் தங்களது வளர்ப்பு நாய்களை சத்திர. சிகிச்சைக்கு ஏற்றவாறு உரிய நேரத்ததிற்கு கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர் கைது

(கொழும்பு)

மாலபே பகுதியில் உள்ள சிறுவர் பாடசாலை அதிபர் ஒருவர் இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த அதிபர் மூன்று மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பதற்காக 70 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இவர் பொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# வாகன விபத்தில் 14 பேர் காயம்

(கொழும்பு)

காலி கொழும்பு பிரதான வீதியின் கினிதோட்ட பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த வாகன விபத்து நேற்று முற்கபல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி யதில் இந்த விபத்து இடம் பெற்றது.

விபத்தில் காயமடைந்துள்ளவர்கள் கராப்பிட்டிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை அந்தப் பகுதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

அம்பாறை தமண எக்கல் ஓயா பிரதேசத்தில் உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். இளைஞர் உயிரிழப்பதற்கு காரணமான விபத்துடன் தொடர்புடைய வாகனம் தப்பிச் சென்றுள்ளது.

தெவல்பஹ பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.சம்பவம் தொடர்பான விசாரணையை தமண பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# சரியான அரசியல் தலைமையின் கரத்தை தமிழ்மக்கள் பலப்படுத்த வேண்டும்

## உதவி வழங்கும் நிகழ்வில் உதயன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக் களுக்கு எதிராக எவராவது செயற் பட்டால் அவர்களுக்கு எதிராக குரல் கொடுப் போம். எனவே தமிழ் மக்கள் சில வதந்தி களை தமது சுயலாப நோக்கங்களுக்காக வெளியிடும் ஊடகங்களின் செய்திகளை சரியென நம்பி விடாது சரியான அரசியல் தலைமைகளின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

அண்மையில் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் பிரிவிலுள்ள 31 கிராம அலுவலர பிரிவுகளில் திவிநெகும திட்டத்தின் கீழ் பத்து இலட்சம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் வகையில் விதை பொருட்கள் உரவகைகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு ஐந்து தொகுதிகளாக கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ் வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் திவி நெகும திட்டத்தின் மூலம் இவ் விதை பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ் உதவித் திட்டங் கள் சிறியவையாக இருப்பினும் இவற்றைக் கொண்டு ஒரு வீட்டுத் தோட்டத்தை உருவாக்க முடியும்.

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செய லர் பிரிவிலுள்ள 31 கிராம அலுவலர் பிரிவுக ளுக்கு திவிநெகும திட்டத்தின் கீழ் விவசாய விதை பொருட்களை கையளிக்கும் நிகழ்வுகள் உரும்பிராய் இந்துக் கல்லூரி, கோப்பாய் கந்தசாமி, கோவில் நீர்வேலி தெற்கு மாதர் சங்கம், புத்தூர் மேற்கு சிவன் கோவில், அச்சுவேலி மருதடி வைர வர் கோவில் ஆகிய இடங்களில் 5 தொகுதி களாக நடைபெற்றது.

தொடர்ந்து விதை பொருட்களை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பிரதேச செயலர் பிரதீபன் ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாள ரும் வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினருமான ஐங்கரன் ஆகியோர் வழங்கி வைத்ததுடன் ஈ.பி.டி. பி.யின் அச்சுவேலி பிரதேச இணைப் பாளர்களான தர் மராஜா லிங் கேஸ் பிரதேச செய லக உத்தி யோகத்தர்கள் கிராம அலு வலர்கள் சமு ர்த்தி உத்தி யோகத் தர் கள் பொது மக்கள் எனப் ப ல ரு ம் கலந்து கொண் டனர்.

## வெற்றிலைக்கேணி வெளிச்சவீட்டை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் வெற்றிலைக்கோணிக் கிராமத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ள (கோரி) வெளிச்ச வீடு கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட வெளிச்சவீடும், கிணறும் முன்னைய காலங்களில் பிகிரங்க வேலைத் திணைக்களத்தின ரால் (P.W.D) இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை திருத்த வேலைகள் செய்து, வெள்ளையடிக்கப்பட்டு ஒழுங்காகப் பராமரிக்கப்பட்டு வந்தது.

தற்போது பகிரங்க வேலைத் திணைக்களத்தை வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை, வீதிகள் அபிவிருத்தித் திணைக்களம் என்பன பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் இவ் வெளிச்சவீடு அதன் அருகில் அமைந்துள்ள் கிணறு என்பன புனரமைப்புச் செய்யப்படவில்லை.

மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்று வரும் படகுகள் காலை வேளையில் இவ்வெளிச்சவீட்டை அடையாளம் கண்டு இலகுவாக தத்தமது கரைகளக்குத் திரும்புகின்றனர்.

ஆகவே இவ்வெளிச்சவீட்டையும், கிணறையும் புனரமைப்புச் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

## வீதிகளில் தேங்கி நிற்கும் வெள்ளநீர் சிரமத்துக்குள்ளாகும் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது பெய்துவரும் பருவமழை காரண மாக வீதிகளில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌ கரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக யாழ். மாநகர சபைக்குட்பட்ட நல்லூர் ஆலய சுழல், ஆஸ்பத்திரி வீதி, போன்ற வீதிப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் அவ் வீதிகளூடாக பயணம் செய்யும் பொது மக்கள் சிரமங்களுக்குள்ளாவதாகவும் குறிப்பாக வாகனங்கள் அவ்வீதியூடாக செல்லும் போது வெள்ள நீர் அடித்துக் செல்லப் படுவதாகவும் சுட்டிக்காட்டப் படுகிறது.

தற்போது நல்லூர் ஆலய சுழலில் தென்னிலங்கைச் சுற்று லாப்பயணிகளின் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் என்பன அதிகளவில் போக்கு வரத்தை மேற்கொள்கின்றன. இந்த வீதியூடாக துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் களில் பயணிப்போரும் மற்றும் நடைபாதசாரிகளும் தம்மீது இந்த வெள்ள நீர் அடித்து செல்வதாகவும் குறிப்பாக மாண வர்களும் உத்தியோகத்தர்க ளும் பெரும் சிரமத்துக் குள்ளாவதாகவும் தெரிவிக்கின்ற னர்.

இனிவரப்போகும் பாரிய மழையினை எதிர்கொள்ளும் வகையில் உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்ற னர். (எஸ்.)





கிளிநொச்சி இலங்கை நகரக்கிளைக்கான நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடம் அமைப்ப தற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் இலங்கை வங்கித் தலைவர் டாக்டர் காமி விக்கிரமசிங்க மற்றும் கிளிநொச்சி மாவட் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், 571 ஆவது படைப்பிரிவின் இராணுவ அதிகாரகிள் ஆகியோர் அடிக்கல் நாட்டுவதையும் அரச அதிபர் உரையாற்றுவதையும் காணலாம். (77)

## விழிப்புலனற்றோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் சுகுணரதீ தெய்வேந்திரம் தலைமையில் வெள்ளைப் பிரம்பின் முக்கியத் துவத்தை வெளிப்படுத்தும் உரை ஒன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விழிப்புலனற் றவர்களுக்கு சுயநட மாட்டப் பயிற்சியில் ஈடுபட்ட 10 பேர் வெள்ளைப் பிரம்பு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளு மாறு விழிப்புலனற்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

## செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கு சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

புலோலி மெ.மி.த.க பாடசாலை ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறும் இச்செயலமர்வில் குறித்த பாட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ-109)

◆◆◆

தென்மராட்சி வலய பாடசாலைகளில் கடமையாற்றும் கட்டாய கல்விக்குழுவுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் பி.ப.2.30 மணிவரை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சைவசமய பரீட்சை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சைவபரி பாலனசபை நடத்தும் அகில இலங்கை சைவநெறி மற்றும் தமிழ்மொழித் தேர்வுகள் ஒக் டோபர் மாதம் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகளுக்கு விண்ணபபித்த பரீட்சார்த்திகள் அனை வருக்கும் அவர்களது பாடசாலை அதிபர்களுக்கு பரீட்சை அனுமதிக்கான சுட்டிலக்கங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவபரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் பொ.கமல நாதன் தெரிவித்துள்ளார். (10)

## மாற்று வலுவுடையவர்களுக்கு இணுவில் நடமாடும் முகாம்

(யாழ்ப்பாணம்)

மாற்றுவலுவுடையவர்களுக் கான இலவச முகாம் ஒன்று எதிர் வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் இணுவில் மக்லியோட் வைத்திய சாலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற குழுவினரால் நடத்தப்படவுள்ளது.

இலங்கை மோட்டிவேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஜெகா னிற்றரின் நிதியுதவியுடன் வவு னியா ஒகன் மன்னார் வாழ்வுதயம், கண்டி மாற்றுவலுவுடையோர் நிலையம் ஆகிய நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவியுடன் நடைபெறவுள்ள இம்முகாமில் அவயங்களை இழந்தவர்களுக்கு புதிய செயற்கை அவயங்களுக் கான அளவெடுத்தல் சக்கர நாற்காலி, முச்சக்கர வண்டிக ளுக்கு அளவெடுத்தல், அவயங்கள் பாதிக்கப்பட்டோருக்கு பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கான சார் புறுப்புக்களுக்கான அளவெடுத தல், முள்ளந்தண்டு பாதிப்புள்ள் சக்கர நாற்காலி பாவனையாளர் களுக்கு விசேட பயிற்சிகளுக் கான பதிவை மேற்கொள்ளல், மாற்று வலுவுடையோருக்கான ஏனைய உதவிகள் சேவைகள் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங் களும் முறைகளும் தொடர்பான விழிப்புணர்வு வழங்குதல் போன்ற செயற்பாடுகள் முன் னெடுக்கபபடவுள்ளது.


இயன் மருத்துவர்கள் செய்கை அவய நிபுணர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியோ ரால் வழங்கப்படும் சேவைகள் அனைத்தும் சர்வதேசத் தரத்தி லான நியமங்களுக்கு ஏற்ப இல வசமாக வழங்கப்படவுள்ளது.

இந்த முகாமில் பயன் பெற வுள்ள செய்கை அவயம் தேவைப படும் பயனாளிகளை யாழ்.நகர் மைய றோட்டறிக் கழகம் ஒழுங்கமைப்புச் செய்கிறது.

இச்சேவையில் மிதிவெடி மூலம் பாதிப்புற்றவர்களுக்கு முன் னுரிமை வழங்கப்படவுள்ளது. சக்கர நாற்காலி முச்சக்கர வண்டி தேவைப்படும் பயனாளிகள் தீபன், மக்லியோட் வைத்திய சாலை, கே.கே.எஸ்.வீதி, இணு வில் என்ற முகவரியில் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அளவெடுக்கப்பட்ட சேவைக் களுக்கான பொருத்துதல் எதிர் வரும் நவம்பர் 20 ஆம் திகதி அன்று அளவெடுக்கப்பட்ட இடத்தி லேயே வழங்கப்படும் என ஏற் பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(உ)






கரவெட்டிப் பிரதேச செயலக சைவ ஆலோசனை சபையினால் அண்மையில் நடைபெற்ற சிவநெறி இருவட்டு வெளியீட்டு விழாவில் கோயில் கடவை சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சுதாகரக்குருக்கள் மங்கள விளக்கேற்றுவதையும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் இருவட்டை கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்திய சீலனிடம் வழங்குவதையும் காணலாம். (116)

# சமய விழுமியங்களையுடைய நூல்கள் எழுதப்படவேண்டும்

## கலாநிதி ஆறு திருமுருகன்



(யாழ்.நிருபர்)

சமூகத்திற்கு விளங்கக்கூடிய மொழி நடையில் சமய நூல்கள் எழுதப்பட வேண்டும். ஆறுமுகநாவலரின் பெரியபுராண வசனம் அக்கால சமூகத்திற்கு விளங்கக்கூடியதாக இருந்தது. ஆனால் அந்த மொழி நடை இன்றைய சமூகத்தில் உள்ளவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது என கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய "பக்தியின் மொழி தமிழ் நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்து உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நல்லூர் கம்பன் கோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று ஆலயங்களில் விக்கிரகங்கள் திருட்டுப் போகின்றன. அது பற்றி முறைபாடு செய்யும்போது விக்கிரகங்களின் உருவ அமைப்பைப்பற்றிக் கூறமுடியாதவர்களாக ஆலய நிர்வாகிகள் காணப்படுகின்றனர்.

ஆலய விக்கிரக அமைப்பு, திருக்கோயில் கட்டட அமைப்பு முறைகள் பற்றிய நூல்கள் வெளிவரவேண்டும் மக்களுக்கு சைவசமய அறிவினை ஏற்படுத்தும் வகையில் நூல்கள் எழுதப்பட வேண்டும்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நாயன்மார்களின் பாடல்களைப் படித்து அவற்றின் பொருளை உணர்ந்து அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை எளிய நடையில் இலகு தமிழில் இந்நூலில் அழகாகச் சொல்லியுள்ளார் என்றார். இந்நிகழ்வில் பேராசிரியர் தி.வேல் நம்பி நயப்புரை நிகழ்த்தினார் நூலாசிரி யரிடமிருந்து மூத்த பெண் எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (10)

# கிராம அலுவலர்களுக்கான காணிப்பதிவு பயிற்சிப்பட்டறை

(வடமராட்சி கிழக்கு)

காணி, மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் காணி உரித்து சம்பந்தமான பதிவுகளை மேற்கொள்வதற்கான பயிற்சிப்பட்டறை ஒன்று அண்மையில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்றுள்ளது. யூ.என்.எச்.சீ.ஆர். நிறுவன அனுசரனையுடன் நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் காணி மற்றும் காணி அபிவிருத்தித் திணைக்களம் நில அளவைத்திணைக்களம், உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இப் பயிற்சிப்பட்டறையில் செம்பியன்பற்று வடக்கு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான 10 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (70)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(18.10.2011–செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஐப்பசி 01 ஆம் நாள்.
இராகுகாலம் 3.02–4.32, சுபநேரம் 10.32 –12.02,
நட்சத்திரம்: திருவாதிரை முழுவதும்
திதி: ஷஷ்டி பி.ப. 4.24 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– காசு வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய வெற்றி, தேக நிலை சுகம், உறவினர் வரவு.

**ரிஷபம:**– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேக நிலை பாதிப்பு, அவரச முழவு, மருத்துவச் செலவு.

**மிதுனம் :**–காசுவரும், குடும்பத்தில் குதூகலம், காரிய வெற்றி, தொழில் விருத்தி, தேக நிலை சுகம்.

**கடகம்:**– குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், உடல் நலம் சுகம், உறவினர் ஆதரவு, சகோதர வெறுப்பு.

**சிம்மம்:**– காசு வரும் குடும்பத்தில் கதூகலம், மன மகிழ்ச்சி, நண்பர் வருஜைக, அயலார் தொந்தரவு.

**கனனி :**– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், வீண் சர்ச்சை, உடல் நலம் பாதிப்பு, அதிகாரப் போட்டி.

**துலாம் :**–காசு வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, சுற்றத்தாா ஆதரவு, மனதில், உற்சாகம், தேக ஆரோக்கியம்.

**விருச்சிகம்:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுவரும், சுற்றத்தார் ஆதரவு, மனதில் உற்சாகம், தேக ஆரோக்கியம்.

**தனுசு:**– பணக் கஷ்டம் குடும்பத்தில் கவலை, மனச்சஞ்சலம், வீண் அலைச்சல், சகோதரவெறுப்பு.

**மகரம:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுவரும், அவசர முழவு, தெரு விபத்து வரலாம், தேக ஆரோக்கியம்.

**கும்பம் :**– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், வீண் சர்ச்சை, தேக நிலை சுகம், அதிகாரப் போட்டி.

**மீனம் :**– குடும்பத்தில் நிம்மதி, காசுவரும் மனமகிழ்ச்சி, தொழில் இலாபம், காரிய சித்தி.

# சமூக விஞ்ஞான கற்கைநெறிக்கு விண்ணப்பங் கோரப்பட்டுள்ளது

(வலிகாமம்)

கொழும்பு நாவலவில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை பல கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

சமூக விஞ்ஞான டிப்ளோமா இளைஞர் அபிவிருத்தி டிப் ளோமா சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பு (B.A) அபிவிருத்தியில் (MA), முதுகலை மாணி, அபிவிருத்தியில் முதுதத்துவமாணி (M.Phil) அபிவிருத்தியில் கலாநிதிப் பட்டம் (Pha) முதலான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கு இளைஞர்களும் வளர்ந்தோரும் விண்ணப்பிக்க முடியும் விண்ணப்பப் படிவங்களை பிராந்திய திறந்த பல்கலைக்கழக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் இம்மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், சமூக விஞ்ஞானத்துறை, இலங்கை திறந்த பல்கலைக் கழகம், நாவல, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேலதிக விபரம் பெறவிரும்புவோர் 0112881377 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# தடங்கலற்ற முறையில் வீதிப்புனரமைப்புக்கு ஏற்பாடு

(யாழ்.நிருபர்)

யாழ். குடாநாட்டில் வீதிப் புனரமைப்புக்கென மேலதிகமாக அதற்குரிய பொருட்கள் கூடுதலாக தருவிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏ-9 பிரதான வீதி, கே.கே.எஸ். வீதி, பருத்தித்துறை வீதி போன்றவற்றின் வீதிப்புனர்நிர்மானம் மற்றும் அகலிப்பு பணிகளுக்கே இந்த மணல் சல்லிக்கல் போன்ற பொருட்கள் மேலதிகமாக எடுத்துவரப்பட்டுள்ளன.

தினமும் கனரக வாகனங்கள் மூலம் இவை யாழ்ப்பாணம் எடுத்துவரப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

# முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுக் காலை வேலணை துறையூர் மருகன் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச அமைப்பாளரும் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா பிரதம விருந்தினராகவும், தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. விக்னேஸ்வரன்,வேலணை பிரதேச சபை செயலாளர் கே. தவராசா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மா.இளம்பிறையன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.சிறப்பு விருந்தினர்களாக வேலணைப் பிரதேசசபை உபதலைவர் சி.கார்த்திகேசு மற்றும் கடற் தொழில் சமாசங்களின் தலைவர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.

# பருவப்பெயர்ச்சி மழை சில நாட்களில் தீவிரமடையும்

## - வானிலை அவதான நிலையம் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பல பகுதிகளிலும் பருவமழை ஆரம்பித் துள்ளது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையான காலப்பகுதியில் 36.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வாணிலை அவதான நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், நேற்று திங்கட் கிழமை காலை 8.30 மணிவரை 8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இப்பருவப் பெயர்ச்சிக் கால நிலை மேலும் தீவிரமடைந்து வரும் நிலையில் சில நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் எனவே பருவ மழையின் போது ஏற்படும் இடி மின்னல் தாக்கங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு அவர் தெரிவித்தார். (பா)

### உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்து

# கிண்ணம் வென்றது வலைப்பாடு ஜெயமீட்பர்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வலைப்பாடு ஜெயமீட்பர் அணி கைப்பற்றிக் கொண்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 முன்னணி அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.


இதன் முதலாவது அரையிறுதியில் வலைப்பாடு ஜெயமீட்பர் அணியும், ஜெயந்திநகர் சந்திரோதய அணியும் மோதின. இதில் வலைப்பாடு ஜெயமீட்பர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் ஊரெழு றோயல் அணியும் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணியும் மோதின. இதில் ஊரெழு றோயல் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியும், வலைப்பாடு ஜெயமீட்பர் அணியும் மோதின. விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் வலைப்பாடு ஜெயமீட்பர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் நாயகனாக ஊரெழு றோயல் அணியைச் சேர்ந்த வெள்ளை தெரிவானார்.

இப்போட்டியின் பிரமத விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரும், றோயல் முன்பள்ளிப் பணிப்பாளருமான எஸ். குமாரும், கௌரவிருந்தினராக கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் பியசீலன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வடமாகாண கராத்தே நிவேதன் சம்பியன்




(யாழ்ப்பாணம்)

வடமாகாண வீர, வீராங்கனைகளுக்கிடையில் இடம்பெற்ற கராத்தேப் போட்டியில் மூன்று பிரிவுகளில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர் விஜயராஜ் நிவேதன் சம்பியன் பட்டம் வென்றார். இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண வீர, வீராங்கனைகளுக்கான கராத்தேப் போட்டி நேற்று முன்தினம் ஓ.எல்.ஆர். வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இப்போட்டிகள் வயது அடிப்படையில் இடம்பெற்றது. இதில் சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர் விஜயராஜ் நிவேதன் 8,9 வயதுப் பிரிவில் தனிக் காட்டா, குழுக் காட்டா மற்றும் சண்டைப் போட்டிகளில் முதலிடம் பெற்று சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குகொண்ட இக்கராத்தேப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் முதலிடம் பெற்று சம்பியன் பட்டம் வென்ற வீரர் நிவேதன் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, நிவேதன் தன் தந்தையான சென்சே கே.எஸ். விஜயராஜ் அவர்களிடம் கராத்தே கலையைப் பயின்று வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

# ஆவரங்கால் மத்தி, மோகனதாஸ் கரப்பந்து கிண்ணத்தை வென்றன

(நாயன்மார்கட்டு)

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ். மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணங்களை ஆவரங்கால் மத்தி மற்றும் மட்டுவில் மோகனதாஸ் அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் நடத்திய இச்சுற்றுப்போட்டி 'ஏ', 'பி' என இரு பிரிவுகளாக நடத்தப்பட்டது.

இதில் 'ஏ' பிரிவின் இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் மத்தி அணியும், ஆவரங்கால் அணியும் தெரிவானது.

'பி' பிரிவின் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் மோகனதாஸ் அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் தகுதி பெற்றன.

இந்த இறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் இரவு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவதாக இடம்பெற்ற இறுதிப போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும், ஆவரங்கால் அணியும் மோதின.

சிறப்பான ஆட்டத் திறனை வெளிப படுத்திய ஆவரங்கால் மத்தி அணி 25-22, 25-23, 25-22 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. இப்போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாக ஆவரங்கால் மத்தி அணியைச் சேர்ந்த சிவ்சொரூபன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் மோதின. மோகனதாஸ் அணி முதல் செட்டை இழந்தபோதிலும் பின்னர் சுதாகரித்துக் கொண்டது. இறுதியில் 22-25, 25-21, 25-21, 25-17 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று மோகனதாஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக பிரதீபன் தெரிவானார்.

இப்போட்டி நிகழ்வில் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (93, 118)

# கூடைப்பந்து ஐக்கியம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் காங்கேசன்துறை ஐக்கியம் அணி வெற்றிபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 V அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

லீக் அடிப்படையில் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடரின் ஆட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் காங்கேசன்துறை ஐக்கியம் அணியும், கோப்பாய் ஐக்கியம் அணியும் மோதின.

இதில் காங்கேசன்துறை ஐக்கியம் அணி 46-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படும் இப்போட்டித் தொடரில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடித்துக்கொள்ளும் அணிகள் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (93)

# சிமிக் வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 இறுதிப் போட்டியில் பரீஸ், கடற்படை

(யாழ்ப்பாணம்)

சிமிக் வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு மானிப்பாய் பரீஸ் அணியும் மற்றும் இலங்கை கடற்படை அணியும் தகுதி பெற்றுள்ளன.

யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமைச் செயலகமும், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கமும் இணைந்து நடத்தும் படையினர் - பொதுமக்கள் நல்லுறவை வளர்க்கும் முகமாக நடத்தப்படும் சிமிக் வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 கிரிக்கெட் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் முதலாவது அரையிறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை பலாலி இராணுவ மைதானத்தில் நடைபெற்றது.

இதில கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணியும், இலங்கை கடற்படை அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இலங்கை கடற்படை அணி இருபது ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குருசிங்கா 24, மதூஸன் 46, சில்வா 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீஸ், ராகுலன், சாம்பவன், பங்குஜன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய கே.சீ.சீ.சீ. அணி, 18.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ராகுலன் 29, கிருபவன் 17, பிரகாஸ் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை கடற்படை அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

இதன் இரண்டாவது அரையிறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலியில் அமைந்துள்ள இராணுவ மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மானிப்பாய் பரீஸ் அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி, 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கார்த்திக் 62, சைவேஸ் 34, லடிக்ஸன் 15, ஜனார்த்தனன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாஸ்கரன், வினோத், மயூரப்பிரியன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய மானிப்பாய் பரீஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றுத் த்ரில் வெற்றிபெற்றது. பாஸ்கரன் 46 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டமிழக்காது ஜெயதீபன் 51, வினோத் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் மானிப்பாய் பரீஸ் அணி நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இறுதிப் போட்டி ஒன்றில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

இதேவேளை, இத்தொடரின் இறுதிப் போட்டி நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (07)



வடக்கு மாகாண நவோதயாப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பெண்கள் பிரிவில் 54 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வீராங்கனைகள் பொறுப்பாசிரியருடன் நிற்பதைக் காணலாம். இப்போட்டி நேற்று முன்தினம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (12)

# அரையிறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்று இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கியம் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணி மோதவுள்ளது.

இரு அணிகளுமே மாவட்டத்தில் பலம் வாய்ந்த அணி என்பதால் இப்போட்டி இறுதி வரை பரபரப்பாக இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (93)

## பிரான்ஸ் வீராங்கனை சம்பியன்



(சாகா)

ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தை பிரான்ஸின் மரியன் பர்தோலி வென்றார்.

ஒரு மணி நேரம் 15 நிமிடங்கள் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசுரை 6-3,6-1 என்ற செட் கணக்கில் மரியன் வென்றார்.

சர்வதேச மகளிர் ரென்னிஸ் தரவரிசையில் பர்தோலி 11ஆவது இடத்திலும், சமந்தா 6ஆவது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

பர்தோலி வெல்லும் 7ஆவது பட்டம் இது. அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் சம்பியனான சமந்தா, இதன் பின்னர் 4 முறை இறுதிப் போட்டி வரை முன்னேறி பட்டத்தைத் தவறவிட்டுள்ளார்.

இதற்கு முன் ரோம், டொரண்டோவில் நடைபெற்ற போட்டிகளிலும் அவர் இறுதிப் போட்டியில் தோற்றார்.

இதேவேளை, ஜப்பானில் போட்டி நடைபெறும் உட்சுபோ ரென்னிஸ் மைதானத்தில் மழை பெய்த காரணத்தால் நேற்று முன்தினமே அரையிறுதி, இறுதி ஆட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

அரையிறுதியில் சமந்தா, ஜெர்மனியின் ஏஞ்சலிக்கை வென்றார். மரியன், சீனாவின் ஜிஜியிங்கை அரையிறுதியில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## தென்னாபிரிக்கா த்ரில் வெற்றி சமநிலையில் ருவென்ரி 20



(ஜோகனஸ்பேர்க்)

பரபரப்பான இரண்டாவது ருவென்ரி 20 போட்டியில் தென்னாபிரிக்க அணி த்ரில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரை தென்னாபிரிக்கா சமன் செய்தது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் ஜோகனஸ் பேர்க்கில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மார்ஷ் 26, டேவிட் ஹசி 12, மிட்சல் மார்ஷ் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க அணியின் முன்னணி வீரர்களை சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் இழந்தது. ஒரு கட்டத்தில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இருப்பினும் திரான் அணியின் நிலையை உணர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இறுதியில் தென்னாபிரிக்க அணி 19.1 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த போர்னல், திரான் இணை 27 பந்துகளில் 64 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்குத் துணை புரிந்தனர். போர்னல் 29, திரான் 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக திரான் தெரிவானார். இதன் மூலம் இரு அணிகளுக்குமிடையிலான ருவென்ரி 20 போட்டித் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரின் முதல் போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஷாங்காய் ஓப்பன் சம்பியன் முர்ரே



(ஷாங்காய்)

சீனாவில் நடைபெற்று வந்த ஷாங்காய் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் இங்கிலாந்து வீரர் ஆண்டி முர்ரே சம்பியன் பட்டம் வென்றார்.

இதன் மூலம் சர்வதேச ஆடவர் ரென்னிஸ் தரவரிசை யில் 3ஆவது இடத்தில் இருந்த சுவிஸ்சர்லாந்தின் ரோஜர் பெடரரை பின் தள்ளிய முர்ரே, 3ஆவது இடத்தைப் பிடித்தார்.

ஷாங்காய் ஓப்பனில் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஸ்பெயின் டேவிட் பெரரை, முர்ரே எதிர்கொண்டார். 1 மணி நேரம் 45 நிமிடங்கள் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த மோதலில் 7-5,6-4 என்ற செட்களில் முர்ரே வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

கடந்த சில வாரங்களில் முர்ரே வெல்லும் 3ஆவது பட்டம் இது. சமீபத்தில் தாய்லாந்து, ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் போட்டியிலும் அவர் கிண்ணம் வென்றார். கடந்த ஒகஸ்ட் மாதத்தில் இருந்து இதுவரை 26 போட்டிகளில் விளையாடிய அவர் 25இல் வெற்றி பெற்றுள்ளார். அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் அரையிறுதியில் ஸ்பெயினின் நடாலிடம் தோற்று வெளியேறியதே, அந்த ஒரு தோல்வியாகும்.

## ஸ்வானால் சர்ச்சை பிளவர் விளக்கம்



(புதுடில்லி)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் எழுதியுள்ள புத்தகத்தில், 2008ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணியின் கப்டனாக கெவின் பீற்றர்சன் தேர்வு செய்யப்பட்டது மோசமான முடிவாகும் என்று விமர்சித்து இருந்தார்.

இது பெரும் சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறது. இது குறித்து இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் ஆன்டி பிளவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நடப்பு வீரர்கள் சுயசரிதைப் புத்தகத்தில் சக வீரர்களைப் பற்றி எழுதுவது மோசமான யோசனையாகும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். இந்தப் பிரச்சினையை பீற்றர்சன் மிகவும் முதிர்ச்சியுடன் கையாளுகிறார். கெவின் பீற்றர்சன் வரும் ஆட்டங்களில் சிறப்பாக ஆடுவார் என்று எதிர்பார்க்கிறேன். இயன் பெல்லை ஆடும் 11 பேர் அணியில் சேர்க்காதது கடுமையான முடிவாகும்.

இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது மிகப்பெரிய சவாலாகும். இருப்பினும் அதனை செய்ய வேண்டும் என்ற குறிக்கோள் எங்களிடம் உள்ளது.

ஆஷஸ் தொடர் வெற்றிக்குப் பின்னர் எங்கள் அணி சிறந்த பெறுபேற்றைப் பெற்று வருகின்றது. ஆசியா மண்ணிலும் அசத்தும் வகையில் எமது அணியைத் தயார் செய்ய வேண்டும்.

ஏனெனில், ஆசியாவிலுள்ள ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கே அதிக ஒத்துழைப்பைக் கொடுக்கும். ஆடுகளத்தின் தன்மையை உணர்ந்து செயற்பட்டால் வெற்றி எங்களைத் தேடி வரும் என்று தெரிவித்துள்ளார்.

## வேகங்களின் கையில் இலங்கையின் வெற்றி



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் வெற்றி வேகப்பந்து வீச்சாளர்களின் செயற பாட்டைப் பொறுத்துத் தான் உள்ளது என்று கப்டன் டில்சான் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளாக இலங்கை அணி தனது வெற்றிக்கு முரளிதரனின் சுழற்பந்து வீச்சை சார்ந்து இருந்தது. முரளிதரன் ஒரு இன்னிங்சில் 6 முதல் 8 விக்கெட்டுகளை வீழ்த்தும் ஆற்றல் கொண்டவர். முரளிதரனைப் போன்று நிலையான திறனை வெளிப்படுத்தக் கூடிய பந்து வீச்சாளர் எங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. வருங்காலத்தில் இலங்கை அணியின் வெற்றி வேகப்பந்து வீச்சாளர்களின் செயற்பாட்டைப் பொறுத்துத் தான் உள்ளது என்று சொல்லலாம். சுழற்பந்து வீச்சில் ஹேரத் தலைசிறந்த வீரர் என்பதை நிரூபித்து வருகிறார். அவருக்கு மற்ற சுழற்பந்து வீச்சாளர்கள் பக்கபலமாக விளங்கினால் டெஸ்ட் போட்டியில் நாங்கள் வெல்ல முடியும் என்பதை நம்பலாம்.

முரளிதரன் ஓய்வு பெற்ற பின்னர் நாங்கள் ஆடிய 11 டெஸ்ட் போட்டியில் ஒரு போட்டியில் கூட வெற்றி பெற வில்லை என்பது குறித்து நான் கவலைப்படவில்லை. அதில் நாங்கள் 2 ஆட்டத்தில் தான் தோற்றோம். 9 ஆட்டங்களை சமநிலை செய்துள்ளோம். இதனை மோசமான சாதனை என்று சொல்ல முடியாது. தோற்ற 2 ஆட்டங்களும் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய வலுவான அணிகளிடம் தான் தோல்வி கண்டு இருக்கிறோம். இதற்கு மோசமான துடுப்பாட்டமே ஒரு காரணமாகும்.

பாகிஸ்தான் அணியில் அனுபவம் மற்றும் திறமை வாய்ந்த இளம் வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். அவர்களின் சவாலை சமாளித்து பாகிஸ்தானைத் தோற் கடிக்க முடியும் என்று நினைக்கிறேன். புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜெப்மார்ஷ் இலங்கை கிரிக்கெட்டை முன்னோக்கி எடுத்து செல்வார் என்று நம்புகிறேன். எங்களிடம் உள்ள குறைகளைக் களைந்து நல்ல நிலைக்கு திரும்புவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## தெளிவற்ற ரன் அவுட் விதி



(மும்பை)

சர்வதேச கிரிக்கெட் சபையால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகள் சிறப்பானதுதான். இருப்பினும் ரன் அவுட் விதி சற்று தெளிவற்றதாகவுள்ளது என்று ஹோலி தெரிவித்துள்ளார்.

விதிமுறை மாற்றம் நல்லதாகும். இது ஆட்டத்தில் விறுவிறுப்பையும், ஆர்வத்தையும் அதிகரிக்க செய்யும். இருப்பினும் முதல் போட்டியில் இந்த விதிமுறை மிகவும் குழப்பமாக இருந்தது. ரன்-அவுட் விதிமுறைச் சற்று தெளிவற்றதாக உள்ளது. துடுப்பாட்ட வீரர் ரன்-அவுட்டை வேண்டுமென்றே தடுக்கும் வகையில் செயற்பட்டார் என்பதை எப்படிக் கணிக்கப் போகிறார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## சூதாட்டத்தைத் தடுக்கும் வகையில் ஊதிய ஒப்பந்தத்தில் உள்ளூர் வீரர்கள்

### பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை

(லாகூர்)

சூதாட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் நோக்கில் பாகிஸ்தான் உள்ளூர் வீரர்களுக்கும் ஊதிய ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் வீரர்களும், சூதாட்டமும் பிரிக்க முடியாத ஒன்றாக விளங்குகிறது. தற்போது அந்த அணியின் பல வீரர்கள் ஸ்பொட் பிக்சிங் சூதாட்டத்தில் சிக்கித் தவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் நோக்குடன் உள்ளூர் வீரர்களுக்கும் ஊதிய ஒப்பந்தம் செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இதன்படி ஒவ்வொரு மாநிலம் வாரியாக 20 வீரர்கள் 3 தரவாரியாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட இருக்கிறார்கள். இதன்படி வீரர்களுக்கு தலா ரூ.20 ஆயிரம், ரூ.15 ஆயிரம், ரூ.10 ஆயிரம் என்று தர வரியாக ஊதியம் கிடைக்கும். இந்த ஒப்பந்தம் 6 மாத காலம் கொண்டதாகும்.

## பூட்டியாவுக்கு விடைகொடுக்கும் போட்டி

பெய்சூங் பூட்டியாவுக்கு பிரியாவிடை கொடுக்கும் வகையில் ஜேர்மனியின் முன்னணி கால்பந்து கிளப்பான பயென் முனிச் அணியுடனான போட்டி அமையும் என்று இந்திய கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்திய கால்பந்து அணியின் முன்னாள் கப்டன் பெய்சூங் பூட்டியா முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவதிப்பட்டு வருகிறார்.

இதனால் அவர் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார். அவருக்கு சிறப்பான முறையில் பிரியா விடைகொடுக்க இந்திய கால்பந்து சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

ஜேர்மனியின் முன்னணி கால்பந்து கிளப்பான பயென் முனிச் அணி இந்தியாவில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் சுற்றுப்பயணம் செய்து இந்திய சிரேஷ்ட அணியுடன் நட்பு ஆட்டத்தில் விளையாடவுள்ளது. கொல்கத்தாவில் ஜனவரி 10ஆம் திகதி நடைபெறும் இந்தப் போட்டி பூட்டியாவுக்கு அதிகாரபூர்வ பிரியா விடைகொடுக்கும் போட்டியாக அமையும் என்று இந்திய கால்பந்து சம்மேளன பொதுச் செயலாளர் குஷல் தாஸ் அறிவித்துள்ளார்.

# 65ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்

## ஐ.தே.க பிரதித்தலைவர் சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

கொழும்பு மக்களுக்கு 65ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுப்பதாக வழங்கிய வாக்குறுதியை ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்ற வேண்டும் என கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நவகம்புர சிறி முத்துமாரியம்மன் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட சசுணட அருண செயற்றிட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டாயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாகத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி, தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போது மக்கள் அதனை நிராகரித்ததனர் 65 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி வாக்குறுதி அளித்தது. அதனை ஏற்றுக் கொண்ட கொழும்பு மாநகர மக்கள் கட்சியை வெற்றிபெறச் செய்தனர்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்திருப்பதால் வாக்குறுதியளித்த 65ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க வேண்டியது கட்சியின் பொறுப்பாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வீடுகளை கட்டுவதற்கு இயலாமை இருந்தால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள பிரேமதாஸவின் மகன் தயார் எனவும் அவர் குறிப்பிட்டார். இதன் போது நவகம்புர சிறி முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு அவர் நிதியுதவியும் வழங்கினார்.

# கொழும்பில் நாம் வெற்றியீட்டியதால் அரசாங்கம் பின்னடைவை சந்தித்துள்ளது



(கொழும்பு)

நாம் வெற்றியீட்டியதால் அரசாங்கம் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது என நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகர சபை மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரி வித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் வெற்றியீட்ட வேண்டுமாயின் சிறிய கூட்டங்களையே நடத்தவேண்டும் என தலைவர் கூறியிருந்தார். கொழும்பு மாநகரம் முழுவதும் நாம் சுமார் 400 கூட்டங்களை நடத்தினோம். சிறியளவில் இந்தக் கூட்டங்கள் ஏற்பாடு செய் யப்பட்டாலும் நாம் நினைத்ததை விட பாரிய கூட்டங்களாக அவை மாற்றமடைந்தன என அவர் குறிப்பிடார்.

தேர்தல் நடவடிக்கைகளின் போது நீங்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப் பினாலேயே அனைத்தையும் செய்ய முடிந்தது. கட்சி சார்பிலும் தலைமைத்துவம் சார்பிலும் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார.

# இந்திய அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்ய சிறப்புப்பிரிவு

## அதிகாரி ஒருவரும் நியமனம்

(கொழும்பு)

**இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்து ஒருங்கிணைப்பதற்காக, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் சிறப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.**

அபிவிருத்தி ஒருங்கிணைப்புப் பிரிவு என்ற பெயரில் அமைக்கப்படவுள்ள இந்தப் புதிய அலகுக்குப் பொறுப்பாகவும் - இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை மேற்பார்வை செய்து ஒருங்கிணைப்பதற்குமாக சிறப்பு அதிகாரி ஒருவரும் நியமிக்கப்படவுள்ளார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியா 5000 மில்லியின் ரூபா பெறுமதியான உதவிகளை அறிவித்திருந்தது. அத்துடன் வடக்கு,தெற்கு பகுதிகளில் தொடருந்துப் பாதை அமைக்கும் திட்டங்களுக்கும் இந்தியா 800 மில்லியன் டொலர்களையும் வழங்கியுள்ளது.

இதுபோன்ற அபிவிருத்திப் பணிகளை இந்தியா மேற்கொள்ளும், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் தமது பணிகளை ஒருங்கிணைப்பதற்கு இந்தியா இதுபோன்றதொரு சிறப்பு அலகை கடந்த ஆண்டில் உருவாக்கியிருந்ததும் .குறிப்பிடத்தக்கது.

இந்திய வெளிவிவகார செயலர் ரஞ்சன் மத்தாய் அண்மையில் கொழும்புக்கு மேற்கொண்டிருந்த பயணத்தை அடுத்தே இலங்கையிலும் இந்தப் பிரிவை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்கள் மிக மெதுவாகவே முன்னெடுக்கப்படுவது குறித்த ரஞ்சன் மத்தாய் அதிருப்தி வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 16பேர் கைது

(கொழும்பு)

நிவித்திகல கங்கைக்கு அருகில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட16 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்த மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர். சந்தேகநபர்கள் இரத்தினபுரி, காவத்தை, தே மற்றும் நிவித்திகலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்தார்.

# சைபர் பாதுகாப்பு வாரத்தில் கணினி தெளிவு படுத்தல்கள்

Cyber Security Week 2011 SRI LANKA

(கொழும்பு)

சைபர் பாதுகாப்பு வாரம் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர அழைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வாரத்தை முன்னிட்டு கணினி மற்றும் இணையதளங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் ரோஹண பள்ளியகுரு தெரிவிக்கின்றார்.

சைபர் பாதுகாப்புக் குறித்து மக்களை தெளிவுபடுத்தும் வாரம், வருடந்தோறும் ஏற்பாடு செய்யப்படுவதாக அவர் கூறினார். சைபர் தொழிநுட்பம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும் என்றும் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் குறிப்பிட்டார்.

சைபர் பாதுகாப்பு தொடர்பிலான விசேட கருத்தரங்கு ஒன்றை கொழும்பில் இந்த வாரம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# உணவு விசமான விவகாரம்; விசேட விசாரணைகள் ஆரம்பம்



(கொழும்பு)

உணவு விஷமடைந்தமையால் லிந்துல பிரதேசத்தில் சிறுவர்கள் உட்பட பலர் திடீர் சுகவீனமுற்ற சம்பவம் குறித்து விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இரண்டு பேர் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சாந்தி சமரசிங்க தெரிவித்தார்.

திடீர் சுகவீனமுற்றவர்கள் வாந்தி, வயிற்றுவலி ஆகிய உபாதைகளால் பாதிக்கப்பட்டிருந்ததாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். கடும் நோய்வாய்ப்பட்ட இருவர் நாவலப்பிட்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

திடீர் சுகவீனமுற்ற 590க்கும் அதிகமானோர் நுவரெலிய மாவட்டத்தின் ஐந்து வைத்தியாசலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சிறுவர்கள் உட்பட்ட பலர் திடீர் சுகவீனமுற்றமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நிகழ்வை ஏற்பாடு செய்த தொண்டர் அமைப்பின் இரண்டு உறுப்பினர்களும் உணவைத் தயாரித்த இரண்டு பேரும், அதிபரும கைதுசெய்யப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் குறித்து விசேட விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த நிகழ்விற்கு உரிய அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பீ.ஜி.குமாரசிறி தெரிவித்தார்.

# தெற்காசிய திரைப்படவிழா

(கொழும்பு)


தெற்காசிய திரைப்பட விழா நவம்பர் 9ஆம் திகதி முதல் 9ஆவது சான்பிரான்சிஸ்கோ நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்த விழாவில், இலங்கையின் பிரபலமான திரைப்பட இயக்குனர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் திரைப்படத் தயாரிப்புக்களுக்கு முக்கியத்துவம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வருட நிகழ்வில், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, திபேத் மற்றும் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 16 திரைப்படங்களை முன்னிலைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் சிறப்புற நடைபெற்ற வடமாகாண தமிழ் இலக்கிய விழா







(மன்னார்)

வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை இடம் பெற்றது. மன்னார் பிரதான பாலத்திற்கு அருகாமையில் ஆரம்பமான பண்பாட்டுப்பேரணி மன்னார் செபஸ்ரியார் தேவாலய வீதியூடாகச் சென்று பொது விளையாட்டு மைதான வீதியைச் சென்றடைந்தது.

விளையாட்டு அரங்கிற்கு முன்நின்ற விருத்தினர்களை பேரணியுடன் பொது விளையாட்டு மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர். மாலை 3 மணியளவில் நகர மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த பென்ஜமின் செல்வம் புலவர் அரங்கில் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இறுதி நாள் நிகழ்வுகள் இடம்பெற்றது.

பின் சிறந்த நூல் தேர்வுக்காண பரிசு வழங்குதல் மற்றும் கௌரவ ஆளுநர் விருது வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது. இதன் போது அமைச்சர் றிஸாட் பதியுதின் மற்றும் வடமாகாண ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு விருதுகளையும் வழங்கி கௌரவித்தனர்.

க.சட்டநாதன் எழுதிய முக்கூடல் சிறுகதை, எஸ்.ஏ.உதயன் எழுதிய வாசாப்பு நாவல், நீ.பி. அருளாநந்தன் எழுதிய கடந்து போகுதல் கவிதை, சு.துரைசிங்கம் எழுதிய பாலன் வருகின்றான் சிறுவர் இலக்கியம், கலாநிதி க.சிறிகனேசன் எழுதிய ஈழத்து கலை இலக்கிய உலகு ஆய்வு இலக்கியம், கந்தையா நாகப்பு எழுதிய வட்டுக்கோட்டை கூத்தும், கிராமியக் கலைகளும், நாடகம், கே.வி.குணசேகரம் எழுதிய திருவருட்பயன் கதைகள் சமயம், இலட்சுமனராசா எழுதிய நெடுந்தீவு சிதையும் சின்னங்கள் - வரலாறு, அருட்திரு இராஜேந்திரம் ஸ்ரலின் எழுதிய ஆளுமை மலரஉள ஆற்றுப்படுத்தல் - பொது என்பனவற்றுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும் 13 கலை இலக்கிய வித்தகர்களுக்கு 2011 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருதும் வழங்கப்பட்டது. வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின தலைவரும், அமைச்சருமான றிசாத பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும், மன்னார் நகர சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான கலை இலக்கிய ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## கிழக்கில் ஐந்து பாலங்களை ஜனாதிபதி திறந்து வைப்பார்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் புதிதாக நிர்மானிக்கப்பட்டுள்ள ஐந்து புதிய பாலங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலங்கள் மட்டக்களப்பு, திருகோணமலைக்கு இடையே உள்ள ஏ-15 வீதியில் உள்ள வெருகல், காயங்கேணி, இறால்குழி, கங்கை மற்றும் உப்பாறு ஆகிய பிரதேசங்களில் உள்ள பாலங்களே மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டம் 'கிழக்கின் உதயம்' கீழ் 297 கோடியே 40 இலட்சம் ரூபா நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இந்தப் பாலங்களின் மூலம் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு இடையேயான பிரயாணம் சிரமமின்றிப் பயணிப்பதற்கும் பயண நேரம் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## அரசியல் படுகொலைச் சம்பவங்கள் மக்களின் கிளர்ச்சிக்கு வழிவகுக்கும்

### ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

கொலன்னாவையில் இடம் பெற்ற கொலை போன்ற சம்பவங்கள் மக்கள் கிளர்ச்சி போன்ற கடும் விளைவுகளுக்கு வழி வகுககக்கூடும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் விஜேவர்தன கூறியுள்ளார்

எகிப்திய மக்கள் கிளர்ச்சியானது இதுபோன்ற சம்பவமொன்றுடன் ஆரம்பித்தது என முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்க ஞாபகார்த்த வைபவத்தில் உரையாற்றுகையில் ருவன் விஜேவர்தன கூறினார்

மிக அவசியமான, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, நீதிச்சேவைகள் ஆணைக்குழு என்பனவற்றுக்கான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளபோதிலும் அக்குழுக்கள் ஸ்தாபிக்கப்படாமை துரதிஷ்டவசமானது.


முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்க பெரும் மனித உரிமைவாதி. அதனாலேயே 1953 ஆம் ஆண்டின் ஹர்த்தாலின்போது அவர் அப்பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார் எனவும் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கொழும்பு மாநகர மேயராகத் தெரிவாகியுள்ள ஏ.ஜே.எம்.முஸம்மில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## என்ன செய்ய வேண்டும் என்பதை இலங்கையே தீர்மானிக்க வேண்டும்

### இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

என்ன செய்ய வேண்டும் என்பதை இலங்கையே தீர்மானிக்க வேண்டும் எனவும் அதனைத் தீர்மானிப்பதற்கான உரிமை வேறு எந்தவொரு நாட்டிற்கும் இல்லை என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் புரூஸ லெவி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அளவில் பதவியை பொறுப்பேற்று இலங்கை வந்தபோது, மெனிக்பார்ம் மற்றும் ஏனைய இடங்களில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த சுமார் மூன்று இலட்சம் மக்கள் மீதே அதிக கவனம் செலுத்தியிருந்தேன்.

சர்வதேச சமூகம் இலங்கையில் 2010 ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்தவர்களில் 80 முதல் 90 வீதமானோரை மீள் குடியேற்றியமை தொடர்பில் ஆச்சரியமடைந்துள்ளது.

நன்மையாயினும் தீமையாயினும் இலங்கை மீது பாரிய சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலம செய்திகள் வெளியாகியுள்ளன. எவ்வாறாயினும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதன் காரணமாக மக்களின் மனங்களில் மாற்றம் இடம் பெற்றிருக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது என்பதே பிரச்சினைக்குரிய விடயமாகும் என கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

இதனாலலேயே விசாரணை நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுவதாகவும் அப்போதே இலங்கைக்கு அரசியல் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை நோக்கிப் பயணிக்க முடியும் என்றும் புரூஸ் லெவி குறிப்பிட்டார்.

ஸ்திரத்தன்மை ஏற்பட்ட பினனரே கடந்த 30 வருடங்களை போன்றதோர் காலகட்டம் இலஙகையில் உருவாகாது என்று தம்மால் உறுதியளிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இத்தாலிய மாலுமியினது சடலம் திருமலைப் பொலிஸில் ஒப்படைப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு கப்பல் ஒன்றில் மரணமான இத்தாலிய மாலுமி ஒருவரது சடலம் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் இருந்து இலங்கைக்கு நிலக்கரியினை ஏற்றி வந்த கப்பலில் பணியாற்றிய மாலுமியே மரணமானதாக கப்பல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாலுமியின் மரணம் இயற்கையானதாகவே இருக்கலாம் என தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் மக்சி புறக்டர், சடலத்தில் எந்த விதமான காயங்களும் தென்படவில்லை எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்த மரணம் குறித்து, திருகோணமலை மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி, விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

கப்பலின் தலைவர் மற்றும் இரு கப்பல் அதிகாரிகளின் சாட்சிகளும் பதிவு செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து பிரேத பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து மரணமானவரின் சடலத்தை இத்தாலிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக திசார சமரசிங்க விசாரிக்கப்பட வேண்டும்

## கோருகிறது அனைத்துலக நீதியான ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதியும், அவுஸ்ரேலியாவுக்கான இலங்கையின் தூதுவருமான அட்மிரல் திசார சமரசிங்க போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிக்கப்பட வேண்டும் என்று அவுஸ்ரேலிய சமஸ்டி பொலிஸாரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அனைத்துலக நீதியாளர் ஆணைக்குழுவின் அவுஸ்ரேலிய பிரிவே இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளது. அட்மிரல் திசார சமரசிங்க, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களில் நேரடியாக தொடர்புபட்டது குறித்த நம்பகரமான சாட்சியங்கள் இருப்பதாகவும் அந்த ஆணைக்குழு கூறியுள்ளது.

முன்னர் இலங்கையில் வாழ்ந்த - தற்போது அவுஸ்ரேலியாவில் வசிக்கும் சாட்சிகளை முன்னிறுத்த முடியும் என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் காலகட்டங்களில் அட்மிரல் திசார சமரசிங்க, கிழக்கு, வடக்கு பகுதிகளுக்கான கடற்படைத் தளபதியாகவும், கடற்படையின் தலைமை அதிகாரியாகவும் செயற்பட்டிருந்தார்.

போரின் இறுதிக்கட்டத்தில் மோதல்களில் இருந்து தப்பிக்கொள்ள முயன்ற பொதுமக்கள் மீது இலங்கைக் கடற்படைக் கப்பல்களில் இருந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தனியான, சுதந்திரமான குற்றச்சாட்டுகள் அனைத்துலக நீதியாளர் ஆணைக்குழுவின் முன்பாகவும், ஏனைய விசாரணையாளர்களிடமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அட்மிரல் திசார சமரசிங்க எறிகணைத் தாக்குதல்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளதற்கோ, அல்லது நேரடியான உத்தரவுகளை வழங்கியதற்கோ சாட்சியங்கள் இல்லை என்றும், ஆனால் தமது கட்டளையின் கீழ் இடம்பெற்ற நடவடிக்கைகளுக்கு இராணுவத் தலைமையாளர்களே பொறுப்பு என்றும் அவுஸ்ரேலிய பொலிஸாரிடம் நீதியாளர் ஆணைக்குழு முன்வைத்துள்ள கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு குறித்து அவுஸ்ரேலிய சமஸ்டி பொலிஸ் ஆராய்ந்து வருவதாகவும், அதற்கு முன்னர் இதுதொடர்பாக மேலதிக தகவல்களை வெளியிடுவது பொருத்தமல்ல என்றும் அவுஸ்ரேலிய சமஸ்டி பொலிஸ் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

அதேவேளை, மோதல்களின் போது தனதும் கடற்படையினரதும் எல்லா நடவடிக்கைகளுமே சட்டரீதியாகவே இருந்ததாக அட்மிரல் திசார சமரசிங்க தெரிவித்துள்ளார்.தவறான அல்லது சட்ட விரோதமான நடத்தை என்ற குற்றச்சாட்டுகளில் உண்மை எதுவும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். அனைத்துலக நீதியாளர் ஆணைக்குழு இந்த அறிக்கையை அவுஸ்ரேலிய சமஸ்டி பொலிஸாருக்கு மட்டுமன்றி கொமன்வெல்த் பொது வழக்குகள் பணிப்பாளர், அவுஸ்ரேலிய பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்கும் கூட அனுப்பி வைத்துள்ளது.

இந்த அறிக்கையில், அம்மிரல் திசார சமரசிங்கவையும் ஏனைய இராணுவத் தலைவர்களையும், சிறிலங்கா ஆயுதப் படைகளின் தலைமை அதிகாரியான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களையும் விசாரிக்க வேண்டும் என்றும், கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

## பங்களாதேஷ் பயணம்



(கொழும்பு)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய இணைப்பாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹுனைஸ் பாரூக் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் பங்களாதேஷ் விஜயம் மேற்கொண்டுள்ளார்

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெறும் தெற்காசிய நாடுகளின் அரசியல் தலைமைத்துவம் தொடரபிலான மாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காவே நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டே நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் சென்றுள்ளார்.

இந்த மாநாட்டினை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருந்துகள் கொள்வனவின் போது அவதானமாக இருக்க வேண்டும்

## இலங்கை ஔடத சங்கம் ஆலோசனை

(கொழும்பு)

நாட்டிலுள்ள பெரும்பாலான மருந்தகங்களில் மருந்தாளர்கள் இல்லையென இலங்கை ஔடத சங்கம் தெரிவிக்கின்றது. கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை ஔடத வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அர்ஜுன டி சில்வா இந்த விடயம் குறித்து சுட்டிக்காட்டினார்.

சுகதார சேவையில் மருந்தாளர்கள் மிக முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர். சில மருந்தகங்களில் மருந்தாளர்கள் இல்லாத பிரச்சினை நிலவுகின்றது. மருந்தகங்களில் மருந்தாளர்கள் இன்மையானது பாரிய பிரச்சினையாகும். இது குறித்து நோயாளர்களைத் தெளிவுபடுத்துவது சிறந்த நடைமுறையாகும்.

மருந்து வாங்குவது என்பது கடைகளில் பொருள் கொள்வனவு செய்வதைப் போன்றதல்ல. இதன் மூலம் உயிராபத்து ஏற்படலாம். மருந்தாளர்கள் இல்லாத மருந்தகங்களில் மருந்து கொள்வனவு செய்யக்கூடாது என்பது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த வேண்டியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சுகாதாரப் பரிசோதகர்களின் ஆலோசனை பெற வலியுறுத்து

(கொழும்பு)

அதிகமானோருக்கு உணவு மற்றும் குடிபானங்களைத் தயாரிக்கும் போது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்துகின்றது. இதன் மூலம் உணவு விசமாதல் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியுமென அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

பெரும் எண்ணிக்கையானோருக்கு உணவு தயாரிக்கும் போது உலக படிமங்கள், பக்ரீரியா மற்றும் அசுத்தங்கள் கலப்பதால் உணவு விசமடையக் கூடிய சாத்தியம் உள்ளதாக அவர் தெரிவித்தார். உணவைத் தயாரிப்பவர்கள் இது குறித்து மிகுந்த அவதானம் செலுத்துவது அவசியமாகும் என்பதுடன், இத்தகைய சந்தர்ப்பங்களில் பிராந்திய பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என உபுல் ரோஹண கூறினார்.

# மக்கள் நிம்மதியாக வாழுகின்ற சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்

## பஸில் ராஜபக்ஷ



(மன்னார்)

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீள் குடியேற்றம் செய்ய முற்படும் போது வெளிநாடுகள் நிதி வழங்குவதிலிருந்து விலகிக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. இந்தப் பணிக்கு எதிராக சில அரச அதிகாரிகளும் செயற்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர். பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தின், மடுப் பிரதேச செயலகப் பிரிவில் மக்கள் வங்கியின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட 50 வீடுகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நாட்டில் இன்று மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தியுள்ளார். அந்தச் சமாதான சூழலை குழப்பி மீண்டும் பயங்கரவாதத்தை ஏற்படுத்த சில சக்திகள் செயற்படுவது குறித்தும் தகவல் கிடைத்துள்ளன.

எமது ஜனாதிபதியினதும், பாதுகாப்புத் தரப்பினரதும் பலம் இருக்கும் வரை அதற்கு ஒரு போதும் இடம்கொடுக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார.

இந்நிகழ்வில் அமைச்சர் றிசாத் பதியுதீன் உரையாற்றும் போது, வடமாகாண முஸ்லிம் மக்களது மீள்குடியேற்றத்திற்கு தற்போது ஏற்பட்டுள்ள தடைகள் அகற்றப்படல் வேண்டும். இடம்பெயர்ந்த சகல மக்களையும் சமமாகப் பார்க்க வேண்டும், நிலையான இடமாற்றம் கொள்கையொன்றை ஏற்படுத்த வேண்டுமென்றார்.


# ஜேர்மனிய சிறுமி மீதும் பாலியல் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

ஜேர்மனியிலிருந்து இலங்கைக்குத் தனது பெற்றோருடன் உல்லாசப் பயணம் மேற்கொண்டிருந்த 15 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி அம்பாந்தோட்டைப் பிரதேசத்திலுள்ள பிரபல உல்லாசப் பயண ஹோட்டல் ஒன்றில் தனது பெற்றோருடன் தங்கியிருந்த போதே இவ் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறிப்பிட்ட ஹோட்டலைச் சேர்ந்த சிற்றூழியர் ஒருவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக தெரிவு செய்யப்பட்ட மேயர்கள் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர். இந்நிகழ்வில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டமையையும், சத்திரயப் பிரமாணம் செய்வதையும் காணலாம்.





# கணினியினால் காணாமல் போனவை

வீதிக்கு, வீதி முளைத்து வரும் "வீடியோ கேம்ஸ்" விளையாட்டுக்களால், உடல் களைக்க விளையாடும் விளையாட்டுகள் மாயமாகிவிட்டன. பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்தவுடன் பறந்து போய் மூலையில் விழும் புததகப்பை. ஆசை ஆசையாய் அம்மா தருவதை சாப்பிட்டுவிட்டு, சட்டையை சாட்டையாய் கழற்றி வீசி, 'அம்மா விளையாடப் போட்டு வாறேன்'...

இதுதான் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் வரை கிராமங்களிலும், நகரங்களிலும் இருந்த வழக்கம். வியர்க்க, விறுவிறுக்க விளையாடி விட்டு, மறுபடியும் சாப்பிட்டு விட்டு, வீசிய புத்தகப்பையை தேடி எடுத்து, இரவு 8.30 மணிக்கு மேல் கண்கள் சொருக, அப்பா அடிப்பாரோ? என்று அவரை ஓரக்கண்ணால் பார்த்து, கணகளை மூட, தலைக்கு மெத்தையாக புத்தகப் பையை வைத்து இனிமையாய் தூங்கிய காலம் அன்று.

முப்போகத்தை பிரிக்கும் காலம் போன்று அன்று விளையாட்டையும், பருவ காலங்களாக பிரித்திருந்தனர். பள்ளிக்கூட காலங்களில், கிளித்தட்டும், வாரோட்டமும், பனங்கொட்டையைத் தூக்கிப் போட்டு விளையாடும் கால்பந்தும், தென்னம் மட்டைக் கிரிக்கெட்டும் அன்றைய விளையாட்டுகள். இவை போக விடுமுறையில் விளையாடும் பருவ விளையாட்டுக்கள். கிட்டிப்புள், எறிபந்து, பம்பரம், மாபிள் அடித்தல் மற்றும் தோழிகளுடன் பல்லாங்குழி, தாயம், மாங்கொட்டை கெந்தி விளையாடியது இன்றும் நினைவில் நீங்காதவை. இன்பம் பொங்க பேசத் தூண்டும் மலரும் நினைவுகள்.

ஆனால், இன்றோ..... சிறுவர்கள் பம்பரம், மாபிள் போளையை ஏட்டளவில் மட்டுமே பார்த்து வருகின்றனர். மாலை முடிந்ததும், அம்மா அலுமாரியில் 50 ரூபா எடுத்தேன், விளையாடி விட்டு வருகிறேன், என்று சொல்லிவிட்டுச் செல்லும் சிறுவன் நேராகப் போவது, வீடியோ கேம்ஸ் கடைக்கு. ஒரு கணினிக்கு மூன்று முதல் நான்கு மாணவர்கள் வரை இடித்துக்கொண்டு இஷ்டத்துக்கு விளையாடுகின்றனர். போதாக்குறைக்கு அவ்வப்போது உடலைக் கெடுக்கும் நொறுக்குத் தீனிகள். வீட்டுக்கு வந்தால் பசியும் எடுக்காது, படிக்க மனமும் இருக்காது. விளைவு 20 வயதில் மாரடைப்பு, 40 வயதில் முடக்கம், 60 வயது வரை இருந்தால் நீண்ட ஆயுள் என்ற பட்டத்தோடு வாழ்க்கை சூன்யமாகிவிடுகிறது.

இதைத் தவிர்க்க, இனியொரு விதி செய்வோம். ஓடி விளையாடு பாப்பா... நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.... என்ற பாரதியின் வரிகளுக்கு உயிர் கொடுப்போம்.

*- நன்றி: சூத்திரம்*

# தன்னை உதறி விரிந்து எழ

மனித மனத்தை அதன் திரைகளை விலக்கிப் பார்த்தால் தெரிவது காமம், வன்முறை, அகங்காரம் ஆகியவைதான். நம் மரபு இதை "காமகுரோதமோகம்" என்றது.

ஏன் மனிதன் காமகுரோதமோகம் கொள்கிறான்? இன்பத்திற்காக. ஓயாது ஒழியாது இன்பத்திற்காக தவித்தபடியே இருக்கிறது மனிதமனம். அழியாத இந்த ஆனந்த வேட்கையே மனதின் இயல்பான நிலை. ஏன் மனம் ஆனந்தத்தை நாடுகிறது? ஏனெனில் மனிதமனம் ஆனந்தத்தால் ஆனது. ஆனந்தமே அதன் சகஜநிலை. எதனாலும் தீண்டப்படாதபோது அது ஆனந்தமாகவே இருக்கிறது. தன் இயல்பு நிலைக்குச் செல்ல அது எப்போதும் ஏங்கியபடியே உள்ளது.

எப்படி தன் ஆனந்தநிலையை மனிதமனம் இழக்கிறது? தன்னை தனித்துணரும் போது. தான் வேறு என உணரும்போது. இப்பிரபஞ்சம் முழுக்க உயிராக உடல்களாக பொருட்களாக நிறைந்திருப்பதில் இருந்து எப்போது வேறுபட்டு உணர்கிறதோ அப்போது மனிதமனம் துயரம் கொள்கிறது.

மனிதமனம் ஆனந்தம் கொள்ளும் கணங்களை எண்ணிப் பாருங்கள். உணவின் ருசியில், உடலுறவில், இயற்கைக் காட்சியொன்றைப் பார்க்கையில், கலைகளில் ஈடுபடுகையில் மனிதமனம் ஆனந்தம் கொள்கிறது. இவ்வானந்தத்தின் உச்ச நிலைகளில் எல்லாம் அது "தன்னை இழந்து" விடுகிறது. மெய்மறக்கிறது.

தான் இல்லாத நிலையையே அது பேரின்பமாக உணர்கிறது. கரைந்து அழிதலையே அது இருத்தலின் உச்சமாக உணர்கிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நாம் கலையின் இலக்கியத்தின் சாரமாகக் கண்டது இதுதான். கலை என்பது ஆனந்தத்தின் வெளிப்பாடு. ஆனந்தத்தை நிகழ்த்துவது. எழுதுபவனும் வாசிப்பவனும் தன் அகங்காரத்தை இழந்து கரைந்து ஒன்றாகும் பெருநிலை அது. கலையின் பணியே அதுதான். தன் அகங்காரத்தால் சுயநலத்தால் தன்னை வேறிட்டு உணர்ந்து துயருறும் மனிதமனத்துக்கு தன்னை உதறி விரிந்து எழும் பேரனுபவத்தை அளிப்பதே அதன் நோக்கம். உன் அகங்காரத்தின் எல்லைக்கோடுகள் அழியும்போது நீ உணரும் எல்லையற்ற தன்மையே உன் இருப்பின் சாரம். அப்போது நீ உன்னையே மானுட இனமாக, வரலாறாக, முடிவிலாத காலமாக உணர்வாய்.

நண்பர்களே இலக்கியம் அதன் பெரும்படைப்புகள் வழியாக மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருப்பது இதையே.

*- ஜெயமோகன்*

# அப்பனே வேலாயுதா!

நடிகர் விஜய் தொடங்கியிருக்கும் "மக்கள் இயக்கம்" மற்றொரு ட்ராக்கில் தமது அரசியல் ஆசைகளை பூர்த்தி செய்ய சில நகர்வுகளை சொந்தமாக செய்வது அ.தி.மு.க. தரப்பை எரிச்சல் படுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது. அதையடுத்து, விஜய்யின் தகப்பனார் எஸ்.ஏ.சந்திரசேகருக்கு சூடான எச்சரிக்கை ஒன்று அ.தி.மு.க. தரப்பில் இருந்து சென்றிருக்கிறது.

உள்ளாட்சித் தேர்தல் பிரசாரங்கள் உச்சத்தில் இருக்கும் நேரத்தில் தென் மாவட்டங்களிலுள்ள சில பகுதிகளில் இருந்து அ.தி.மு.க. தலைமைச் செயலகத்துக்கு புகார் மேல் புகார்கள் வரத் தொடங்கின. அ.தி.மு.க. வேட்பாளர் ஒருபக்கமாக பிரசாரம் செய்ய, விஜய் இயக்கத்தினர் அதே வார்ட்டில் தமது சொந்த வேட்பாளரை, 'அ.தி.மு.க. ஆதரவு பெற்ற வேடபாளர்' என்று விறுவிறுப்பாக பிரசாரம் செய்ய, ஏகப்பட்ட குழப்பங்கள்.

இறுதியில், சென்னையில் வைத்து சந்திரசேகரிடம், 'இதையெல்லாம் உடனடியாக நிறுத்திக் கொள்ளுங்கள்' என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் அவரோ, இது எதுவுமே தனக்குத் தெரியாதது போல பாவ்லா பண்ணியிருக்கிறார். 'விஜய் ரசிகர்கள் சிலர் ஆர்வக் கோளாறில் தாங்களாகவே முடிவு செய்து தேர்தலில் நின்றிருக்கலாம. அதற்கும் எமக்கும் தொடர்பு இல்லை' என்ற ரூட்டில் அவர் போயிருக்கிறார்.

இந்த மூவ், கார்டனை ரொம்பவும் எரிச்சலடைய வைத்துவிட்டது.

'ஓகோ, உங்களுக்குத் தெரியாதா? அப்ப சரி. அவர்களை எப்படி ஆ.்.ப் செயவது என்று எங்களுக்குத் தெரியும்' என்று சூடாகவே சொற்கள் வந்து விழுந்திருக்கின்றன.

அதன் பின்னர்தான் சந்திரசேகருக்கு, இதெல்லாம் சினிமா அல்ல, நிஜமாகவே நெருப்புடன் விளையாடுவது என்ற விஷயம் புரிந்திருக்கின்றது.

திருச்செந்தூரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர், 'உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் மக்கள் இயக்கத்தினர் அனைவரும் போட்டியில் இருந்து விலகவேண்டும். அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயற்படவேண்டும்' என்று அறிவித்தார்.

அவரது பகிரங்க வேண்டுகோளில், 'எமது மக்கள் இயக்கத்தின் கட்டுப்பாட்டை மீறி யாரேனும் போட்டியிட்டால், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் இயக்கத்தின் பெயரையோ, படத்தையோ, கொடியையோ, விஜய்யின் பெயரையோ பயன்படுத்தக்கூடாது. தேர்தலுக்கு தேர்தல் அணி மாறுவது நல்ல தல்ல. அப்படிச் செய்தால் அந்த இயககத் தால் வளர முடியாது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. தனியாக போட்டியிடுவதால், அ.தி.மு.க.வுக்கு ஆதரவான நிலைப் பாட்டை நாம் எடுத்து உள்ளோம்' என்று கூறியிருக்கிறார்.

இந்தத் தேர்தலில் மட்டுமென்ன, அடுத்த தேர்தலிலும் அ.தி.மு.க. கூட்டணியில் இவர்கள் பெயர் இடம்பெற சான்ஸ் அவ்வளவாக இல்லை. காரணம், எஸ்.ஏ.சந்திரசேகர் ஸ்டைல் அரசியல் ஜெயலலிதாவுக்கு சரிப்பட்டு வராது!

எமது ஊகம் சரியாக இருந்தால், இப்படி ஒரு அறிக்கை விட்டுவிட்டு, திரை மறைவில் தமது இயக்க ஆட்களை போட்டியில் இருந்து விலக வேண்டாம் என்று சிக்னல் கொடுக்க விரும்புவார் எஸ்ஏ.சந்திரசேகர். அது அவரது ஸ்டைல். அதை அவர் செய்வதும், செய்யாமல் விடுவதும், அ.தி.மு.க.வில் இருந்து கொடுக்கப்பட்ட எச்சரிக்கை எவ்வளவு சூடு என்பதில் தங்கியுள்ளது.


ஒருவேளை அவர் ரிஸ்க் எடுத்து, தனது ஸ்டைலில் அ.தி.மு.க.வை அண்டர்-கட் செய்ய முயன்றால், அதன்பின்தான் ஜெயலலிதாவின் ஸ்டைலைக் காண வேண்டியிருக்கும்.

வேலாயுதத்துக்கு எதிராக வேறு சில "வேல் ஆயுதங்கள்" வந்திறங்கும்!

*- நன்றி : விறுவிறுப்பு*

# பொன்னாடைப் பண்பாடு

பெரிய தலைவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் இடைவிடாது நடு நாயகருக்கு பொன்னாடை போர்த்துவதை, மேடையோர பின்வரிசை நாற்காலியிலிருந்து கவனித்த போதுதான் உண்மை தெரிந்தது. போதும் போதாமல் போர்த்தப்பட்ட ஆடைகளின் கணக்கை எண்ணிக்கொண்டிருந்த போது அந்த உண்மை பளிச்சென்று வெளிச்சத்துக்கு வந்தது. என் கணக்கின்படி, சென்னை உஸ்மான் ரோடு கடைகளில் உள்ள அத்தனை பொன்னாடைகளையும் போர்த்தியிருக்க வேண்டும். இல்லை. போர்த்தப்பட்டது ஒரே ஒரு பொன்னாடைதான். எப்படி? பிரமுகர் நுழைகையில் அவரிடம் ஒரு பொன்னாடை தரப்படுகிறது. அவர் அதை வீசி விரித்து தலைவருக்கு போட, போட்டோ ்.ப்ளாஷ் எடுக்க, அவர் விலக, தலைவர் பொன்னாடையை பின்னாடி நிற்கும் உதவியாளரிடம் கொடுக்க, அவர் அதை வாங்கி உப உதவியாளரிடம் தர, அது உள்ளே வரும் அடுத்த பிரமுகருக்கு தக்க சமயத்தில் தரப்படுகிறது. இதுதான் பொன்னாடையின் தனிச்சுற்று.



இதில் ஒரே ஒரு சிக்கல்தான். பொன்னாடை போர்த்தப்பட்ட சில பன்னாடைகள், உடனே அதை இஸ்திரிக்காரன் போல சீராக மடித்து நாற்காலியில் வைத்து அதன்மேல் உட்கார்ந்து விடுவார்கள். இந்த அல்லக்கைகளுக்காக ஓரிரு எக்ஸ்ட்ரா பொன்னாடைகள் தேவைப்படும். மற்றபடி மூன்று அல்லது மிஞ்சிப் போனால் நான்கு பொன்னாடைகளில் எந்தப் பாராட்டுக் கூட்டத்தையும் சமாளித்து விடலாம்.

என் வீட்டில் சோபா முதுகுக்கோ, நாய் படுத்துக்கொள்ளவோ, எப்போதாவது மலை வாசஸ்தலம் சென்றால் போர்த்திக்கொள்ளவோ எதற்கும் பயனில்லாமல் அலுமாரி நிறைய பொன்னாடை! இவைகளை என்ன செய்வது என்று, தினம் ஒரு கூட்டத்திற்குச் செல்லும் பேராசிரிய பேச்சாள நண்பரைக் கேட்டேன். 'வீட்டுக்கு எடுத்துட்டுப் போகாதீங்க. அப்பதான் பிரச்சினை. எந்தக் கூட்டத்தில் போடறாங்களோ அதிலேயே கேப் கிடைக்கையில் தலைவருக்கோ, அல்லது நிதியுதவிய புரவலருக்கோ, யாருமே கிடைக்கலைன்னா தேர்ந்தெடுத்த பார்வையாளருக்கோ போட்டுட்டு வந்துடணும். வீட்டுக்கு எடுத்துப் போவது ஆபத்து. மனைவி கட்டாயம் கோவிப்பாங்க, சண்டை வரும்' என்றார்.

'இனி, சரிங்க! வீட்டில் ஏற்கனவே சேர்ந்ததை என்ன செய்யறதுங்க?' என்றேன்.

'பார்க்க வர்ராங்களே, அவங்களுக்குப் போட்டுடுங்க! கூட ஒரு எலுமிச்சை வெச்சா சந்தோஷப்படுவாங்க' என்றார்.

"பொன்னாடைப் பண்பாடு" சங்க காலத்திலிருந்து நம்மிடையே இருந்து வருவது. கடையேழு வள்ளல்களில் ஒருவனான வையாவிக் கோப்பெரும் பேகனை பரணர் -


*'உடாஅ போரா வாகுத லறிந்தும்*
*படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ'*

"எப்போதும் போர்த்திக்கொண்டு திரிய முடியாது என்று தெரிந்தும், மயிலுக்குப் போர்வை தந்தவனே" என்று புகழ்ந்திருக்கிறார். (புறநானூறு-141)

*- சுஜாதா*

## இந்தியச் செய்திகள்

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மறு ஆய்வு செய்யும் திட்டம் இல்லை



தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மறு ஆய்வு செய்யும் எந்தத் திட்டமும் இல்லை என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் சல்மான் குரஷித் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தகவல் அறியும் உரிமைச் சட் டத்தை மறு ஆய்வு செய்யும் திட்டம் ஏதுமில்லை. இந்தச் சட் டம் தொடர்பான அனுபவங் களை இப்போது கூர்ந்து கவனிதது்க் கொண்டிருக்கிறோம்.

சில காலத்துக்குப் பின்பு, அனுபவம், தேவை மற்றும் கருத்தொற்றுமையின் அடிப் படையில் நாம் சில மாற்றங்க ளைச் செய்யலாம். இவையெல் லாம் எதிர்காலம் சம்பந்தப் பட்டது. ஆதலால் இப்போதே நான் எதுவும் கூற இயலாது.


அமைச்சர்கள் பதவிப் பிர மாணம் எடுக்கும்போது இரகசியக் காப்புப் பிரமாணமும் சேர்த்து எடுத்துக் கொள்கின்றனர் என்பதை மறந்துவிடக் கூடாது. ரகசியத்தை ஒரு குமாஸ்தா மூலம் அறிந்து கொள்ள முடியு மெனில், நாம் இரகசிய காப்புப் பிரமாணத்தை மாற்ற வேண்டி யது தான். சில குறிப்பிட்ட காரணங்களுக்காக சில விட யங்கள் இரகசியமாக இருக்க வேண்டியது அவசியம்.

தகவல் அறியும் உரி மைச் சட்டத்தில் அடிப்படை மாற றங்களைக் கொண்டு வர வேண்டுமா என்று என்னைக் கேட்டால், தேவையில்லை என்று தான் நான் கூறுவேன்.

எந்தச் சட்டத்தையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அதனை விரிவு படுத்த வேண்டுமெனில் விரிவுபடுத்தலாம். மேலும் ஆழமாக்க வேண்டுமெனில் ஆழப்படுத்தலாம். விதிவிலக்கு கள் தரவேண்டுமெனில், விதி விலக்கு தரலாம். தற்போது இச்சட்டத்திலிருந்து சி.பி.ஜக்கு விதிவிலக்கு தரப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் இச்சட்டத்தால் கேள்வி கேட்கப்படுகின்றன. குறிப்பிட்ட நீதிபதி மட்டும் உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளது ஏன்? மற்றவருக்கு அத்தகைய வாயப்பு தரப்படாதது ஏன்? என்பது போன்ற கேள்விகளும் இச்சட் டத்தின் உதவியால் எழுப்பப்படு கின்றன என் றார்.

# ஜெயலலிதா, கருணாநிதி, விஜயகாந்த் வாக்களிப்பு




-சென்னை)

உள்ளாட்சித் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. சென்னையில் நடைபெற்றுவரும் உள்ளாட்சித் தேர்த லில் முதல்வர் ஜெயலலிதா, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் வாக்களித்தார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி கோபாலபுரத்திலும், தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் சாலிகிராமத்திலும் வாக்களித்தனர்.

# கூடங்குளம் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்



தமிழகத்தில் நேற்று உள்ளாட்சித் தேர்தல் இடம்பெற்றதால், கூடங்குளம் எதிர்ப்பாளர்கள் தங்களது போராட் டத்தை நிறுத்தி வைத்துள்ளனர்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி நடைபெறும் போராட் டத்தைத் தாற்காலிகமாக நிறுத்திவைப்ப தென ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து, சாலை களில் அமைக்கப்பட்ட தடுப்புகள் அகற்றப் பட்டன.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடவலியுறுத்தி அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். 2 ஆம் கட்டமாக இடிந்த கரையில் உண்ணாவிரதமும், கூடங்குளத் தில் போராட்டமும் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் சரியான தீர்ப்பை வழங்குவர்

## விஜயகாந்த் நம்பிக்கை



உள்ளாட்சித் தேர்தலில் தே.மு.தி.க விற்கு ஆதரவாக மக்கள் வாக்கு அமையும் என்று அக்கட்சித் தலைவர் விஜயகாந்த் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

உள்ளாட்சி மன்றத் தேர்தலில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித்தனியே போட்டியிடு கின்றது. தே.மு.தி.க, மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைநது கூட்டாக இந்தத் தேர்தல்களில் போட்டியிடுகிறது.

கடந்த 20 நாட்களுக்கும் மேலாக தமிழ்நாடு முழுவதும் பிரசாரம் செய்துள்ளேன். ஏராளமான பொது மக்கள் ஆங்காங்கே கலந்து கொண்டு தங்கள் பேராதரவை தெரிவித்துள்ளனர். அரசியலில் உள்ளாட்சித் தேர்தல் ஒரு புதிய மாற்றத்தை தமிழ்நாட்டு மக்கள் கொண்டு வரு வார்கள் என்கின்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ளாட்சி மன்றங்களில் பொறுப்பு வகித்து, ஆதிக்கம் செலுத்திய அரசியல் கட்சிகள், தங்களை எல்லா வகையிலும் பலப் படுத்திக் கொண்டு உள்ளது மட்டு மல்ல, இந்தத் தேர்தல்களிலும் தாங்களே பதவிகளைக் கைப்பற்ற முனைந்துள்ளனர். சாம, பேத, தான, தண்டம் என்கின்ற நான்கு வகை உபாயங்களையும் கையா[illegible] வருகின்றனர். பல இடங்களில் வாக்காளார்கள் பட்டியல் சரிவர இல்லை. சில இடங்களில் வேட்பாளர்கள் மிரட்டப்படு கிறார்கள் என்றார்.

## அரசின் விளம்பரப்பணத்திற்காக.... (14ம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகவே அவர் தனது படைப்பில் குறிப்பிட்ட சம்பவத்திற்கு கண், காது எல்லாம் சொருகுவதுடன் எழுத்தில் குறிப்பிடப்பட வேண்டியவர்களின் பெயர் விபரங்களையும் சேர்த்து எழுதிவிடுவார். உதயனின் உயர் மட்டமும் கொட்டா விப் பாணியில் அதனை அவ்வாறே அச்சுக்கு அனுப்பிவிடுவார்கள். அதன் உண்மைத் தன்மை, அதன் பின்னால் உள்ள கண்ணீர்கள் எதுவும் எவருக்கும் தெரிவதில்லை. அது தொடர்பில் யாரிடம் கேள்வி கேட்பது என்று யாருக்கும் புரிவதில்லை. இவ்வாறான பெருமளவான சம்பவங்கள் இடம்பெற்றாலும் உதாரணத்திற்கு சில விடயங்களைக் குறிப்பிடுகிறோம்.

அண்மையில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் ரவீந்திரன் அவர்கள் அவரது நிர்வாகத்தின் கீழான நிதி யினை தனக்கான ஒரு வாகனக் கொள்வனவிற்காகப் பயன்படுத திக் கொண்டார் என்ற சாரப்பட கோப்பாய் சண்முகம் எழுதிய கட்டுரை ஒன்று பிரசுரமாகியிருந்தது. இந்தச் சம்பவத்தினை அடுத்து குறித்த அதிகாரி மிகுந்த மன உளைச்சல் அடைந்த நிலையில் உதயன் காரியாலயத்திற்குச் சென்றிருக்கின்றார். அவரையும் உதயன் நிர்வாகம் அவமதிக்கத் தவறவில்லை. நீங்கள் மோசடி செய்யவில்லை என்றால் அதனை பத்திரி கையில் பிரசுரிப்பதாக இருந்தால் நான் அவ்வாறு செய்ய வில்லை என்று எழுத்து மூலம் தாருங்கள் என்று உதயன் நிர்வாகம் அந்த அதிகாரியை மிரட்டியிருக்கின்றது. குறித்த அதிகாரிக்கு எழுத்து மூலம் உதயனுக்கு மறுப்பு வழங்கு வதற்கு என்ன தேவை இருக்கின்றது? அந்த அதிகாரி மோசடி செய்திருந்தால் அதற்கான ஆதாரத்தினை உதயன் வெளியிடடி ருக்க வேண்டும். இல்லையேல் சம்பந்தப்பட்டவருக்காவது ஆதாரப்படுத்தியிருக்க வேண்டும். எது சரி? எது தவறு என்று பகுத்துணரும் ஊடகப் பக்குவம் அற்றவர்களை தன்னகத்தே கொண்டிருக்கின்ற உதயன் மக்களை வழி நடத்துகின்றது என்ற போர்வையில் நிர்வாகிகளுக்கும் ஊழியர்களுக்கும் மக்க ளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலான இடைவெளியினை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. தேர்தல்காலங்களிலும், விற்பனைக்காகவும் தேசியம், சமூக நலன் என்று பறை தட்டிக் கொண்டிருப்பதால் மனமார்ந்த பலன் கிட்டிவிடப் போவதில்லை. பத்திரிகையில் பணி செய்பவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு பணி நிறைவின் பின்னரும் ஒரு ஆத்ம திருப்தி வந்தே சேரும். ஆனால் யாரையாவது தாக்கி எழுதிவிட்டோம் என்று திருப்திப்பட்டுக் கொள்வதிலும் நியாயத்திற்காக எழுதினோம், நியாயத்திற்காக பாடுபடுகிறோம் என்று எண்ணி அதற்காக உழைத்து நிறைவு காண்பதே உண்மையான திருப்தியாகும். எல்லாக் கோணங்களிலும் ஆய்ந்தாலும் உதயன் தனக்கான சரியான பாதையை விட்டுவிட்டு வேறெங்கோ செல்வதாகவே எண்ணத் தோன்றுகிறது.

- நன்றி : சரிதம்

# தமிழக உள்ளாட்சித் தேர்தல் நேற்று முதல்கட்ட வாக்குப்பதிவு



(சென்னை)

தமிழக உள்ளாட்சித் தேர்தல் நேற்று இடம்பெற்றது. முதல்வர் ஜெயலலிதா, எதிர்கட்சித் தலைவர் விஜயகாந்த் தி.மு.க தலைவர் கருணாநிதி ஆகி யோர் வாக்களித்தனர்.

தமிழகத்தில் முதல் கட்ட உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று சென்னை உள்ளிட்ட சில இடங்களில் பல் வேறு காரணங்களினால் தாமத மாக தொடங்கியுள்ளது.

தமிழகம் முழுவதும் முதல் கட்ட உள்ளாட்சித் தேர்தலுக் கான வாக்குப் பதிவு காலை 7 மணிக்குத் தொடங்கியது. ஆனால் காலை 6 மணிக்கே பல இடங்களில் வாக்காளர்கள் வரிசையில் நிற்க ஆரம்பித்து விட்டதால் வாக்குப் பதிவு காலையிலேயே விறுவிறுப்பாக தொடங்கியுள்ளது. பெரும் பாலான இடங்களிலும் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்து வந்துள்ளனர்.

முதல்வர் ஜெயலலிதா, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் உள்ள வாக்குச் சாவடியில் இனறு காலை வாக்களித்தார். வாக்க ளித்த பின்னர் அவர் அ.தி.மு.க 40 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக அ.தி. மு.க தலைமைக் கழக அலுவல கத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

தே.மு.தி.க தலைவர் விஜய காந்த் தனது மனைவி பிரேம லதா, மச்சான் சுதீஷ் உள்ளிட் டோர் குடும்பத்தினருடன் சாலி கிராமம் காவேரி ரங்கன் பள்ளி வாக்குச் சாவடியில் வாக்களித்த னர்.

# சோமாலிய படை நடவடிக்கையில் கென்ய இராணுவத்தினர்

உலகச் செய்திகள்



சோமாலியாவில் கென்ய படையினர் படை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அல் ஷாப் ஆயுதக் குழுக்களுக்கு எதிரான நட வடிக்கைகளை தமது நாட்டு படையினர்கள் மேற்கொண்டுள்ளதாக கென்ய உயர் அதிகாரி யொருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

கென்யாவில் ஸ்பெய்னினை சேர்ந்த இரண்டு உதவிப் பணியாளர்கள் கடத்தப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அல் ஷாப் ஆயுததாரிகளின் பெரும் பான்மை கட்டுப்பாட்டிலுள்ள சோமாலியாவின் தென் பிராந்தியத்தில் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

உதவிப் பணியாளர்கள் கடத்தப்பட்டுள்ளமை காரணமாக கென்ய அரசாங்கம் பாரிய அழுத்தங்களை எதிர் நோக்கியுள்ளதாக சர்வதேச தகவல்கள் சுட்டிக் காட்டியுள்ளன

# ஈரானுக்கு எதிராக புதிய தடைகளை அமெரிக்கா விதிக்க முயல்கின்றது

## - ஈரான் குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கான தமது நாட்டுத்தூதுவரை ஈரான் கொலை செய்ய முயன்ற விவகாரத்தை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் கவனத்துக்கு கொண்டுவர சவுதி அரேபியா முதல்கட்ட நடவடிக்கையை எடுத்துள்ளது.சவுதி அரேபியாவின் இந்த நடவடிக்கை காரணமாக ஈரானுக்கு எதிராக புதிய தடைகள் விதிக்கப்படலாம் என சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள ஈரான், தமது நாட்டை தனிமைப்படுத்த அமெரிக்கா முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளது.இந்த கொடிய சதித்திட்டம் தொடர்பாக ஐநாவிற்கான சவுதி அரேபிய நிரந்தரப் பிரதிநிதி, செயலாளர் நாயகம் பான் கீ மூனின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானின் பாதுகாப்புப் படையுடன் தொடர்புடைய இருவர் தமது நாட்டிற்கான சவுதி அரேபியாவின் தூதுவர் ஆதில் அல் ஜுபேலை கொலை செய்யத் திட்டமிட்டதாக கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கா அறிவித்திருந்தது.



இந்த கொலை முயற்சியை திட்டமிட்ட இரண்டு நபர்களில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும், மற்றைய நபர் ஈரானில் இருப்பதாகவும் அமெரிக்கா மேலும் தெரிவித்திருந்தது. எனினும், இதனை நிராகரித்த ஈரான், அணுசக்தி திட்டம் காரணமாக தெஹ்ரான் மீது சர்வதேச தடைகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், .மேலும் தங்களை தனிமைப்படுத்துவதற்காக இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக கூறியிருந்தது. தாம் மேலும் முன்னேற்றமடைவதைத் தடுப்பதற்கு இவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக ஈரான் ஜனாதிபதி மெஹமூத் அஹமதிநிஜாத் குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து பௌத்த துறவி தீக்குளிப்பு

திபெத்தை ஆக்கிரமித்துள்ள சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எட்டாவது நபராக பௌத்த துறவி ஒருவர் தீக்குளித்துள்ளார்.

கடந்த 1950 முதல் சீனா திபெத்தை தன் பிடியில் வைத்துள்ளது. திபெத்தின் அரசியல் மற்றும் மதத் தலைவரான தலாய்லாமா இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ளார். இந்நிலையில் திபெத்தை சீனாவின் பிடியில் இருந்து விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டங்கள் வலுத்து வருகீன்றன.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில்· உள்ள சிச்சுவான் மாகாணத்தின் அபா பகுதியில் நேற்று முன்தினம் 19 வயதுடைய முன்னாள் புத்த மதத் துறவி ஒருவர் தீக்குளித்துள்ளார். அவர் முன்பு அபா பகுதியில் உள்ள கீர்த்தி மடாலயத்தில் துறவியாக இருந்தவர். தற்போது திபெத் விடுதலைக்காகச் செயல்பட்டு வந்தவராவார். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவரது உடலில் பற்றியிருந்த தீயை அணைத்து விட்டனர். ஆனால அவர் தற்போது எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை.கடந்த மார்ச் முதல் இதுவரை ஏழு நபர்கள் சீனாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தீக்குளித்துள்ளனர். தற்போது இவர் எட்டாவது நபராக தீக்குளிப்புப் பட்டியலில் சேர்ந்துள்ளார்.

# லிபியாவில் தொடரும் சண்டை; கடாபியின் மாளிகைச் சுவர் இடிப்பு



லிபியாவில் கடாபி மாளிகை சுவர் புல்டோசர்கள் மூலம் இடிக்கப்பட்டுள்ளது. லிபியாவில் சர்வாதிகாரி கடாபியின் 42 ஆண்டு கால ஆட்சிக்கு போராட்டத்தின் மூலம் பொதுமக்கள் முற்றுப்புள்ளி வைத்து விட்டனர். மக்களின் புரட்சி படையின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் கடாபியின் மனைவி, மகள் மற்றும் 2 மகன்கள் நாட்டை விட்டு ஓடி விட்டனர். மேலும் 2 மகன்கள் புரட்சிப் படையிடம் சிக்கினர்.

கடாபியின் பிரமாண்டமான மாளிகை பாப் ஆல் -அஷிஷ்யா நகரில் உள்ளது. இது லிபியாவின தலைநகர் திரிபோலியின் புறநகர் பகுதியில் உள்ளது. தற்போது புரட்சிப்படையின் பிடியில் இருக்கும் இந்த மாளிகையின் சுவர்கள் மிக உயரமாகப் பாதுகாப்புடன் யாரும் நுழைய முடியாத வகையில் கட்டப்பட்டு உள்ளது.

அவை நேற்று முன்தினம் புல்டோசர்கள் மூலம் இடித்து தரை மட்டமாக்கப்பட்டன. இதை ஏராளமான மக்கள் கூடி நின்று பார்த்து ரசித்தனர். அப்போது, கடவுள் மிகப் பெரியவர், இது நாட்டுக்காக உயிரை விட்ட தியாகிகளின் ரத்தத்தால் கட்டப்பட்டது என்பன போன்ற கோஷங்களை எழுப்பினார்கள். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. இதற்கிடையே கடாபியின் ஆதரவு கடைசி நகரான பானிவாலிட்டையும் புரட்சிப் படை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வருகிறது. அங்கு புரட்சிப் படையின் வீரர்கள் முன்னேறி வருகின்றனர். சிர்த் நகரிலும் தொடர்ந்து சண்டை நடைபெறுகின்றது.

# பதிவிருக்கப் பெட்டகம்

முல்லாவின் கழுதை தொலைந்துபோய்விட்டது. அக்கம் பக்கத்தினர் முல்லாவிற்கு ஒத்தாசையாக ஊர் முழுவதும் தேடினார்கள். கிடைக்கவில்லை. உடனே அக்கம் பக்கத்தினர் வருத்தமடையத் தொடங்கினார்கள்.

ஆனால் முல்லா முகத்தில் வருத்தம் தெரியவேயில்லை. அனைவரும் முல்லாவிடம் கேட்டார்கள்.

"உங்களுக்குக் கவலையே இல்லையா?"

"நான் இன்னும் தூரத்தில் தெரிகிற மலைக்குப் போய்க் கூடத் தேடவில்லையே தேட எவ்வளவு இடம் மிச்சமிருக்கு அதையெல்லாம் தேடிப்பார்த்த பிறகுதான் கவலைப்படுவேன்" என்றார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

முல்லாவிடம் ஒரு தாய் புகார் கொடுக்க வந்திருந்தாள். அவளுடைய மகன் தினமும் வீட்டில் வாங்கி வைக்கிற சர்க்கரை முழுவதையும் தின்றுவிடுகிறான் என்றும் அவன் திருந்துவதற்கு நல்லதொரு தீர்ப்பை முல்லா வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள்.

"விஷயம் சிக்கலாக இருக்கிறது தீர்ப்பை ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கிறேன்" என்றார் முல்லா.

இதே பதிலை கிட்டத்தட்ட வாராவாரம் மூன்று மாதமாய்ச் சொல்லிக்கொண்டேயிருந்தார்.

கடைசியாய் ஒருநாள் தீர்ப்பை வழங்கினார். "பையா இனிமேல் நீ தினமும் நூறு கிராமுக்கு மேல் சர்க்கரையை எடுத்துத் தின்னக் கூடாது" என்றார்.

உடனே அந்தத் தாய் முல்லாவிடம், "இந்தத் தீர்ப்பை நீங்கள் முன்பே குடுத்திருக்கலாமே?" என்றாள்.

முல்லா சொன்னார்: "நான் முதல்ல இந்தப் பழக்கத்தை விடுவதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்று சோதித்துப் பார்க்க வேண்டாமா?"

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

முல்லா தன் ஊரில் வசிக்கும் பெரும் பணக்காரர் ஒருவரைப் பார்க்கப் போயிருந்தார். அவர் ஏழைகளுக்கு உதவுகிற பரோபகாரியாக இருந்தார். அவரிடம் சென்று முல்லா இப்படிச் சொன்னார்: "எங்கள் ஊரில் ஒருவர் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் மிகமிகக் கஷ்டப்படுகிறார் அவருக்கு உங்களால் உதவமுடியுமா?"

பணக்காரர் சில பொற்காசுகளை எடுத்துக் கொடுத்துவிட்டுக் கேட்டார்: "நம்மூரில் அந்த அளவுக்குக் கஷ்டப்படுகிற கடனாளி யார்?"

"நான்தான்" என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினார் முல்லா.

சில மாதங்கள் கழித்து மறுபடியும் அவரிடம் வந்தார் முல்லா.

முல்லாவைப் பார்த்ததும் கடுப்பாகிய பணக்காரர் கேட்டார்: "கடனைத் திருப்பி அடைக்க முடியாத ஒருத்தருக்கு உதவி வேணும். அப்படித்தானே முல்லா?"

"ம்"

"அந்தக் கடனாளி நீதானே?"

"இல்லை வேறு ஒரு ஏழை, பிரபுவே!"

பணக்காரரின் மனம் இளகியது. இன்னொருவருக்காக உதவி கேட்டு வந்திருக்கும் முல்லாவிடம் உடனே சில பொற்காசுகளை எடுத்துக் கொடுத்துவிட்டுக் கேட்டார். "அந்த ஏழை வாங்கிய கடனை அடைப்பதிலே உங்களுக்கு என்ன கரிசனை?"

"அவன் கடன் வாங்கியிருப்பது என்னிடம்தானே"

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

முல்லா ஒரு இரவு வெளியூர் விடுதியொன்றில் தங்க நேர்ந்தது. பணியாட்கள் எது தேவையென்றாலும் கூப்பிடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

முல்லா பயணக் களைப்பில் அசந்து தூங்கிவிட்டார். நடுஇரவில் தாகம் எடுக்க எழுந்து, "கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?" என்று திரும்பத் திரும்பக் கூப்பிட்டுப் பார்த்தார். யாருமே எட்டிப் பார்க்கவில்லை.

உடனே "நெருப்பு நெருப்பு!" என்று கத்தினார் முல்லா.

அடுத்த விநாடியே அத்தனை பணியாளர்களும் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தார்கள்.

"எங்கே நெருப்பு.!"

முல்லா தன் தொண்டையைச் சுட்டிக்காட்டி, "இங்கேதான் அணைக்கிறதுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்" என்றார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாடியிலிருந்து ஏதோ விழுந்த சத்தம் கேட்டு, முல்லாவின் மனைவி கேட்டாள்.

"என்ன முல்லா சத்தம் அங்கே?"

"ஒன்றுமில்லை"

"ஒன்றுமில்லையா. சத்தம் ஏதோ பெரிதாய்க் கேட்டதே?"

"மாடியிலிருந்து என் சட்டை கீழே விழுந்துவிட்டது"

"சட்டை விழுந்தா அவ்வளவு சத்தம்?"

"சட்டைக்குள்ளே நானும் இருந்தேனே."

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

முல்லாவிடம் ஒரு துறவி கேட்டார்.

"நாம் எங்கிருந்து வந்தோம்? முடிவில் நாம் எங்கு போகிறோம்?"

"எனக்குத் தெரியாது. ஆனால் அது பயங்கரமானதுதான்."

"ஏன்? எப்படி?"

"குழந்தையாக இங்கு வரும்போது அழுதுகொண்டே வருகிறோம். திரும்பிப் போவதற்குள் நிறையப் பேரை அழ வைத்துவிட்டுப் போகிறோமே." என்றார் முல்லா.

# நிதிமூலதனத்தின் கொடுங்கோன்மை!

*- அசோக் மித்ரா கட்டுரையிலிருந்து.*

உடனடி லாபம், மேலும் லாபம், மென் மேலும் லாபம் என்பதே நிதி மூலதனத்தின் தொடரும் வேட்டை. இதற்காக, உலகம் முழுவதும் சுதந்திரமாகச் சுற்றி வருவதற்கான உலக அமைப்பினை அது தனது நீண்ட நெடிய முயற்சியின் மூலம் உருவாக்கியிருக்கிறது. உற்பத்தியில் ஈடுபடுவதை விட ஊகத்தில் ஈடுபடுவதன் மூலமே, அத்தகைய உடனடிக் கொள்ளை லாபம் சாத்தியமாகிறது. எனவே, ஊக நடவடிக்கைகள் அதனது இயல்பான விருப்பமாக மாறியிருக்கிறது.

அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலுள்ள பணக்கார நாடுகளிலும் புதிய உயர் தொழில் நுட்பங்கள் காரணமாக, பிற நாடுகளை விட, முதலீடு - உற்பத்தி விகிதம் சாதகமாக மாறியுள்ளது. இந்த நாடுகளில் வருமான வினியோகத்தில் எந்த மாற்றமும் நிகழ்ந்து விடவில்லை. எனவே, ஒட்டுமொத்த கிராக்கி நிலைமைகளிலும் ஸ்திரத்தன்மை உள்ளது. ஊக நடவடிக்கைகளுக்கு இது வெகுவாகப் பொருந்துகின்ற சூழ்நிலை என்பதால், அவை பன்மடங்கு அதிகரித்துள்ளன.

நிதி மூலதனத்திற்கு அறநெறிகள் என்றெல்லாம் ஒன்றும் கிடையாது. தனது லாபத்தினைப் பெருக்க வேண்டுமென்றால், அது எவ்வளவு மோசமானது என்றாலும், கிரிமினல் நடவடிக்கை என்றாலும் கூட அதில் ஈடுபடத் தயங்காது. எந்த அமெரிக்கப் பொருளாதாரம் தனக்கு மிகப் பெரும் பலமாக இருந்ததோ, அந்தப் பொருளாதாரத்தினையே இன்று பலவீனப்படுத்துவதில நிதி மூலதனம் தயக்கம் காட்டவில்லை.

நிதி மூலதனத்தின் கொடுங்கோன்மை, மேற்கு ஐரோப்பாவில் மத்திய தரைக் கடல் ஓரங்களில் இருக்கும் சிறிய நாடுகளை வறுமைக்குள்ளாக்கும் நிலைமைக்குச் சென்றிருக்கிறது. பங்குச் சந்தையின் மீதான முழுமையான கட்டுப்பாடு அந்நிய நிதி முதலீட்டாளர்களின் கைகளில் உள்ளது. வளர்முக நாடுகள் உருவாக்கி வைத்திருக்கும் தொழில் உற்பத்தித் தளங்களை அழிப்பதற்குமான சக்தியும் இன்று அதனிடம் உள்ளது.

அதனுடைய அழிவு சக்தி ஒருபுறம் இருப்பினும் கூட, நாம் வேறு ஒரு அம்சத்தினை விவாதிக்க முடியும். நிதி மூலதனம் தகர்நிலையினை எட்டிவிட்டது என்பது உண்மையா? கடந்த இருபது ஆண்டு காலத்தில் உலக நிதி மூலதனத்தின் பேராசையும், தவறான கணிப்புகளுமே, பெருவீழ்ச்சி காலத்திறகுப் பின்னர் அமெரிக்காவை இவ்வளவு பெரிய பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளியிருக்கிறது.

1930களில், அமெரிக்க ஜனாதிபதி பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், அரசாங்கத்தின் பொதுப்பணிகளின் மூலம் வருமானத்தையும், வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கினார். பற்றாக்குறை பட்ஜெட் மூலம் நிதி நிலைமையினைச் சமாளித்தார்.

இன்றைய அமெரிக்காவில் நிதி மூலதனத்தின் அரசியல் செல்வாக்கு, இதற்கு நேர்மாறாக செயற்பட்டிருக்கிறது. பாரக் ஒபாமாவும் பற்றாக்குறை பட்ஜெட்டிற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். ஆனால் மக்களுக்காக அல்ல. திவாலாகும் நிலையிலிருந்த வங்கிகளையும், பெரிய கம்பெனிகளையும் காப்பாற்றுவதற்கான நிர்ப்பந்தம் அது. அவர்களது சொந்தத் தவறுகளின் காரணமாக ஏற்பட்ட நிலைமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக செலவழிக்கப்பட்ட பணம் அது. உலக நிதியங்களுக்கு தலைமை தாங்கிய, கம்பெனி தலைவர்களின் போனஸ் உட்பட அனைத்தும் பாதுகாக்கப்பட்டது.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் ஒதுக்கிய பணத்தின் ஆகப் பெரும பகுதி, பெரிய பெரிய கம்பெனிகளின் நலன்களுக்காகவே செலவிடப்பட்டதே தவிர, நடுத்தர வர்க்கம் மற்றும் தொழிலாளி வர்க்கத்தினரின் வாழ்நிலைத் துயரங்களைப் போக்குவதற்கு செலவிடப்படவில்லை.

தேசியப் பொருளாதாரங்கள் பலவற்றை அழித்த பின்னரும் கூட நிதி மூலதனம் ஒரு அச்சுறுத்தும் சக்தியாகவே தொடர்ந்து வருகிறது. அதன் அளவு கடந்த பேராசை அமெரிக்காவில் உற்பத்தி தேக்கத்தினை உருவாககுமா, அதைவிட மோசமான நிலைமைகளை உருவாக்குமா? மேற்கு ஐரோப்பாவில், சமூக நிலைமைகளை புரட்டிப் போடுமா? என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. வியத்தகு வகையில் பலவும் நடக்கக் கூடும். அமெரிக்கப் பொருளாதாரம் நம்பகத்தன்மையினை இழக்குமானால், டொலர் உலகின் ரிசேர்வ் நாணயம் என்ற அந்தஸ்தினை இழந்து விடும். அதுவே, நிதி மூலதனத்தின் இறுதி யாத்திரைப் பாடலாக அமையலாம்.

மற்றுமொரு காரணியும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டும். நிதி மூலதனத்தினை எதிர்கொள்ளும் சக்தியாக ஏதும் இல்லாததும் நிதி மூலதனத்தின் ஆதிக்கம் தொடர்வதற்குக் காரணமாய் இருக்கிறது.

உலகின் அடிவானத்தைத் தொட்டுப் பார்த்தால், இன்னும் 20 ஆண்டுகளில், சீனா பெரிய அளவில் பொருளாதார மற்றும் இராணுவ பலத்துடன் நிதிமூலதனத்தினை எதிர்கொள்ளும் சக்தியாக உருவாகும் சாத்தியங்கள் உள்ளன. ஆனால் ஒரு நிபந்தனை. ஏற்றுமதியினை பெரிதும் நம்பி நிற்கும் பொருளாதாரம் என்ற நிலைமையிலிருந்து அது விடுபட வேண்டும்.

நன்றி : 'தி ஹிந்து' நாளிதழ்

# அரசின் விளம்பரப் பணத்திற்காக, ஊடகக் கொள்கை மாறியது!

தமிழ்த்தேசியம் என்ற உயரிய பதத்தினை தமது தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்ற நிறுவனங்களும் தனிநபர்களும் தாயகத்திலும், புலம் பெயர் தளத்திலும் விஸ்வரூபம் எடுத்து வருவதை போருக்குப் பின்னான காலப்பகுதியில் பரவலாக அவதானிக்க முடிகிறது. இதன் அடிப்படையில் தமிழ்த் தேசியம் என்ற போர்வையில தடு(டம்)மாற ஆரம்பித்திருக்கிறது உதயன்.

உதயன் பத்திரிகையில் பணிபுரிந்தோர் கொடுத்த உயிர்விலைகள், தியாகங்கள் எல்லாமே உதயனுக்கான தேசியம் சார்ந்து சிந்திக்கும் வாசகர்களின் எண்ணிக்கைக்கு வழிசெய்தன. உதயனின் சாதாரண நிலையில் இருகின்ற பல பணியாளர்கள் பலியெடுக்கப்பட்ட போதிலும் அவர்களின் குடும்பங்களுக்கு வாராந்தம் பல இலட்சம் வருவாய் ஈட்டும் உதயன் நிர்வாகம் உதவிகள் எதனையும் வழங்கிவருவதாக அறியமுடியவில்லை.

**'சரிதம் கட்டுரையிலிருந்து'.**



இருப்பினும் உதயனின் அண்மைய போக்கில் மாறுதல் உணரப்பட்டுள்ளது.

தேசியம் என்ற கருப்பொருளை பிரதானமாகக் காட்டிக்கொண்டு பயணிக்க முற்படும் அதன் போக்கில ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து சுட்டிக்காட்ட முற்படுகின்றோம்.

விளம்பரத்தின் ஊடாக பாரிய இலாமீட்டுகின்ற உதயன், சுடரொளி பத்திரிகைகளுக்கு வழமையாக வழங்கப்பட்டு வருகின்ற அரசாங்க விளம்பரங்கள் அண்மையகால்மாக வழங்கப்படாது தடுத்து நிறுத்தப்பட்டன. இதன் பின்னணி என்ன? என்று தெரியாமல் குழமபியிருந்த அதன் நிர்வாகி அண்மையில் கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவைச் சந்தித்த போது அவரது கருத்தோட்டத்தில் இருந்து அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டினை உதயன், சுடரொளி பத்திரிகைகள் கொண்டிருப்பதாலேயே விளம்பரங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாக முடிவுக்கு வந்திருக்கின்றார். உடனடியாகவே உதயனின் உயர் மட்டம் தனது ஊடகக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவர முடிவெடுத்தது மட்டுமல்ல அதனை நடைமுறைப்படுத்தவும் முற்பட்டது.

இதன் ஒரு விடயமாக பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவை உதயன், சுடரொளியின் செய்தியாளர் தொடர்பு கொண்டு நேர்காணல்களை மேற்கொண்டு இரண்டு நாட்களாக செய்திகளாகவும், நேர்காணல்களாகவும் வெளியிட்டிருந்தமையை குறிப்பிட முடியும்.

பாராளுமன்றில் ஆயிரத்து ஐநூறு



முன்னாள் போராளிகளை ஒரே நாளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுவிததாக பிரதான செய்தி வெளியிட்டிருந்த உதயன் அதே போராளிகளில் பெருமளவானவர்கள் இன்னமும் விடுவிககப்படாத நிலையில் இருப்பதை எந்த இடத்திலும் எழுதிக் காட்ட முற்படவில்லை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் எவருக்கு வேண்டுமானலும் எதிராக எழுதுங்கள் ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக மட்டும் செய்திகளை வெளியிட வேண்டாம் என்று ஆசிரிய பீடத்திற்கு உதயனின் அதி உயர் பீடம வலியுறுத்தித் தெரிவித்திருப்பதாக அறிய முடிகின்றது. உதயனைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பாராளுமன்ற உரைகளிலும் ஈபிடிபி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே பிரதான பேசுபொருளாக விளங்கிவருவதை கடந்த காலப்பதிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தேசிய நலன் சார்ந்து சிந்திக்காதுவிடின் சமூக நலனிலாவது அக்கறை கொண்டதாக உதயன் செயற்படவேணடும். அந்த விடயத்திலும் அது அக்கறையின்றி செயற்படுவதை ஆதாரப்படுத்த முற்படுகின்றோம்.

உதயனின் மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் பத்திரிகையில் இருந்து வெளியே(ற்றப்பட்ட)றிய பின்னர் உதயன் பத்திரிகை, பத்திரிகைத் தர்மத்தில் இருந்து விலகி அதல பாதாளத்தை நோக்கிச் செலவதை அவதானிக்க முடிகிறது. ஊடகங்களில் எழுதுகின்ற போது செய்திகளாக இருக்கலாம், கட்டுரைகளாக இருக்கலாம் அவற்றுக்கான ஆதாரங்கள் என்பவை முக்கியமானவையாக முன்னைய காலங்களில் கொள்ளப்பட்டன. குறிப்பாக வித்தியாதரன் காலத்தில் அவர் அதனை இறுக்கமாகக் கடைப்பிடித்திருந்தார் என்றே சொல்லவேண்டும். தற்போதைய நிலையில் அவ்வாறான விடயம் ஏதாவது உண்டா? என்று கேட்கும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டிருக்கின்றது. பத்திரிகைகளிலோ ஏனைய ஊடகங்களிலோ யாரோ ஒரு குற்றவாளியையேனும் சுட்டிக்காட்டுகின்ற போது நாகரிகமான எழுத்து நடையினைக் கையாள்தல், பெயர் விபரங்களை நேரடியாக சுட்டாமல் மறைமுகமாக சுட்டி எழுதுவது போன்ற பண்புகள் கைதேர்ந்த ஊடகர்களிடத்தில் காணப்படும். ஆனால் அவ்வாறான தன்மைகளை எல்லாம் கடந்து ஆரம்ப நிலை எழுத்தாளர்கள் போல உதயனின் எழுத்து நடை அமைந்திருப்பது வேதனை தரும் விடயமாகும்.

தற்போது சமூகத்தினை நல்வழிப் படுத்தும் நோக்கில் உதயன் தன்னகத்திலே புதிய விடயங்களை உள்ளடக்கி செய்திகளை வெளியிட்டு வருகின்றது. அவற்றின் ஊடாக வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றமையை தொடர்ந்தும் அவதானிக்கலாம். கோப்பாய் சண்முகம் என்ற பெயரில் வெளிவருகின்ற கட்டுரைகளில் யாராவது ஒருவரை தாக்கி எழுதுகின்றோம் என்ற நோக்கில் சம்பந்தப்பட்டவர்கள் மீது அவதூறு ஏற்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நிறுவனங்களில் பணிபுரிவோரோ அல்லது வெளியில் உள்ளோரோ அல்லது கோப்பாய் சண்முகத்தின் உறவினர்களோ தமது காது வாக்கில் படுகின்ற கதைகளை கோப்பாய் சண்முகத்திடம் தெரிவிப்பார்கள் போல் உள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர் ஒன்றியத் தலைவர் மீது தாக்குதல் நாம் இலங்கையர் அமைப்புக் கண்டனம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தாக்கப்பட்ட சம்பவத்தை நாம் இலங்கையர் அமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது. அத்துடன், இந்த தாக்குதல் சம்பவத்திற்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும் எனவும் இவ்வமைப்பு தெரிவித்துள்ளது. நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்னவால் வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்க தலைவர் சுப்ரமணியம் தவபாலசிங்கம் நேற்று 10 பேர் கொண்ட வன்முறைக் குழுவினரால் தாக்கப்பட்டுள்ளார். அவர் வீதியில் சென்று கொண்டிருந்தபோது, உங்களுக்கு தனிநாடு தேவையா எனக் கூறி, வன்முறையாளர்கள் அவரை தாக்கியுள்ளனர். இநத தாக்குதலில் காயமடைந்த தவபாலசிங்கம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தை நாம் இலங்கையர் அமைப்பு வன்மையாக கண்டிக்கிறது. அத்துடன் இச்சம்பவதுடன் தொடர்புடைய எவரையும் பொலிஸார் இதுவரை கைதுசெய்ய முடியாது போயுள்ளது. அரசாங்கம் வடக்கில் தமிழ் மக்களை அச்சுறுத்தி பாரியளவில், பலவந்தமான ஏகாதிபத்தியத்தின் மூலம் வடக்கை ஆட்சி செய்ய முயற்சித்துவருவதாக நாம் இலங்கையர் அமைப்பு கடந்த காலம் முதல சுட்டிக்காட்டி வருகிறது. யாழ்ப்பாணத்தில் 55 ஆயிரம் பேரை கொண்ட படைத்தரப்பு நிலை கொண்டுள்ள சூழ்நிலையில், இனந் தெரியாதவர்கள் இப்படியான தாக்குதல்களை நடத்துகின்றனர் எனக் கூறுவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே இத்தகைய தாக்குதல சம்பவங்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மின்விநியோக வலைப்பின்னலில் அவசர திருத்த வேலைகள் செய்யும் பொருட்டு வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்தூண்களை இடமாற்றம் செய்யவேண்டி யிருப்பதாலும் 19.10.2011 புதன் கிழமை மற்றும் 21.10.2011 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பண்ணாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் 22.10.2011 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, புன்னாலைக் கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின்தடை ஏற்படும் என மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

### மாணவர் தலைவர்...

அது போன்ற காவலரண்களை உடனே அகற்றவேண்டும். மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளிற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். மாணவர்களின் தனித்துவமான செயற்பாடுகளில் இனந் தெரியாதோர் என அழைக்கப்படுவோர் தலையிடுவது நிறுத்தப்படவேண்டும். மாணவர்களாகிய நாம் எங்கு செல்லவும் அனுமதியளிக்கப்பட வேண்டும். மேற்படி 6 கோரிக்கைகளும் நிறைவேற்றும் வரை விரிவுரைகளைப் பகிஸ்கரிக்கப் போவதாகவும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து குறித்த மாணவர்கள் சுலோக, அட்டைகளை ஏந்தியவாறு யாழ். பல்கலைக் கழகத்தின் இரண்டாவது நுழைவாயில் வழியாக வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க முற்பட்டனர், எனினும் குறித்த வீதியில் பொதுமக்களுக்கு இடையூறின்றி போராட்டத்தை நடத்துமாறு மாணவர்கள் பொலிஸாரினால் பணிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து அமைதியாக போராட்டத்தை முன்னெடுத்த மாணவர்கள் வீதியில் ரயர்களைப் போட்டு எரியூட்டிய பின் பல்கலைக்கழகத்திற்குள் கலைந்து சென்றனர். குறித்த மாணவர்களின் போராட்டம் காரணமாக இராமநாதன் வீதியில் பதற்றம் நிலவியது. பொலிஸாரும் கலகமடக்கும் பொலிஸாரும் இரா ணுவத்தினரும் அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

(பா,எஸ்)

### கூட்டமைப்பு...

மாற்றி வெலிஓயா எனும் புதிய பிரதேச செயலகத்தை உருவாக்கும் நடவடிக்கை, வடகிழக்கு மாகாணங்களில் காணிப்பதிவு என்னும் போர்வையில் அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட மோசடியான நில அபகரிப்புகள், வடக்கு கிழக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் படையினரது குடியேற்றத் திட்டம் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், விநோ நோகராதலிங்கம், சரவணபவன், சிறீதரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ அரசியல் பிரிவுத் தலைவர் சிவாஜிலிங்கம், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச்செயலர் தி.சிறீதரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலர் செல்வராஜா கஜேந்திரன், உபதலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிறீரெலோ தலைவர் உதயராசா, புளொட் மத்தியகுழு உறுப்பினர்களான சிவநேசன் பவன், ஜி.ரி.லிங்கநாதன், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும் பங்கேற்றிருந்தனர்.

இதில் கலந்துகொண்ட கட்சி தலைவர்களின் கருத்துரைகள் வீ.ஆனந்தசங்கரியின் தலைமையில் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் பழரசம் வழங்கப்பட்டு உண்ணாவிரதம் நிறைவுக்கு வந்தது.

### கிளாலியில்...

எப்பொழுதும் பக்க பலமாக இருப்போம் நீண்டகால கடுமையான முயற்சியின் பயனாக மீள் குடியேற்றம் சாத்தியப்பட்டுள்ளது இதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்கள் தங்களுடைய முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். குறிப் பாக கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் தங்களுடைய பணிகளை முடித்திருக்கின்றார்கள் அத்தோடு கிளாலி மீள்குடியேற்றத்திற்காக உழைத்த அனைவருக்கும் கிளாலி மக்கள் சார்பாக தனது நன்றியினை தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமை உதவி அரச அதிபர ஜெயராணி, பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் முகுந்தன், கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் முருகவேல் 522 படைப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் அத்துல சில்வா 552 படைப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஜயதிலக, கிளிநொச்சி தலைமை பொலீஸ் அதிகாரீ ரணசிங்க கடற்றொழில் நீரியல் வள மாவட்ட உதவிப்பணிப்பாளர் கணேசமூர்த்தி அருட்தந்தை பத்திநாதன் மற்றும் ஜஸ்ரின் ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைவர் சிவப்பிரகாசம் சபையின் உறுப் பினர் அன்ரன் அன்பழகன் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி பிரதேச இணைப்பாளரும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினருமான சாள்ஸ் ஈ.பி.டி.பி.யின் சாவகச்சேரி பிரதேச இணைப்பாளர் வலன்டையன் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

# இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் இந்திய அணி வெற்றிபெற்றது.



(புதுடில்லி)

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் புதுடில்லியின் பெரோசா கோட்லா மைதானத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்டுக்கலால் வெற்றி பெற்றது. பகல் இரவு ஆட்டமாக இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுபபெடுத்தாடியது.

எனினும் அவ்வணியின் ஆரம்ப வீரர்களான அணித்தலைவர் குக், கீஸ்வெற்றர், இருவரும் ஓட்டம் எதனையும் பெறாமலேயே ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் வந்த வீரர்கள் எவரும் நிலைத்து நின்று ஆடாததனால் அவ்வணி 48.2 ஓவரில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 237 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணி சார்பாக எவரும் அரைசதத்தை எட்டவில்லை. இதன்படி ரொட்- 34 பீற்றர்சன் 46, போபரா - 36 பெப்ஸ்ரோ 35, பட்டேல் 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் வினய்குமார் -4 யாதவ் - 2 பிரவின்குமார், அஸ்வின், ஜடேஜா மூவரும் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர். தொடர்ந்து 238 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய இந்திய அணி 36.4 ஓவரில இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிழக்கை அடைந்தது.

இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான பட்டேல் -12, ரஹானா - 14, விரைவாக ஆட்டமிழந்தாலும், கம்பீர், கோலி ஜோடி சிறப்பாக ஆடி வெற்றிபெற்றது. இதில் கம்பீர் 84, கோலி 112, ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர்.

பந்து வீச்சில் பிரஸ்ணன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். போட்டியின் ஆட்ட நாயகனாக ஹோலி தெரிவாகினார்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 2:0 என முன்னணி வகிக்கிறது.

### முறையான...


பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் ஆராய்வதற்கு சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி தொடங்கி 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது

### யுத்தத்தின் பின்...

இதனைத தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தீவிரவாதம் ஒழிக்கப்பட்டதன் மூலம் இந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது. தற்பொழுது பொருளாதாரம் மற்றும் சமாதானத்தை இலக்காகக்கொண்டு நாடு வளர்ச்சியடைந்து வருகின்றது. நாட்டு மக்கள் மற்றைய சமுதாயத்துடன் பழகுவதற்கு மொழி முக்கியத்துவம பெறுகின்றது. எமது நாட்டைப் பொறுத்தவரை அனைத்து மக்களும் மும்மொழிகளையும் பேசக்கூடியவர்களாக இருக்கவேண்டும். இன்று இளைஞர்கள் மும மொழிகளிலும் தேர்ச்சிபெற்று உலக மயமாக்கலுக்கு ஏற்ப தம்மை மாற்றியமைக்க வேண்டும் என்றார்.

### செய்திப்பாணம்

**வல்லிபுரம் ஆழ்வாரின் வருடாந்தத் தேர்த் திருவிழாவில் இல்லையாம் திருட்டுகள் இவ்வருடம் - எல்லையில் பூட்டியுள கருவிகள் புகைப்படம் பிடித்தாகும் காட்டிக் கொடுத்திடும் களவு!**



# கொழும்பு மாநகர சபையின் அதிகாரம் அடுத்த மூன்று மாதத்தில் கைப்பற்றப்படும்

## என்கிறார் முஹமட் மஹ்ரூப்



(கொழும்பு)

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் தோல்வியுற்ற போதிலும் அதன் அதிகாரத்தை எதிர்வரும் மூன்று மாதங்களில் தான் கைப்பற்றிக் காட்டப் போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் கொழும்பு மாநகர சபைக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்ற முஹமட் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக ஊடகவியலாளர்கள் மற்றும் தனது ஆதரவாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்ற போதும் அதனால் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியவில்லை என்பதுடன், வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு மாநகர சபையில் 27 க்கும் குறைவான ஆசனங்களைப் பெற்றுள்ளது. எனினும் இன்னும் மூன்று மாதங்களில் இச்சபையின் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிக் காட்டுவோம் என சவால் விடுக்கின்றேன்.

ரணில் வீதிவீதியாகக், கடைகடையாக, வீடுவீடாகச் சென்று பிரசாரத்தை மேற்கொண்ட போதும், முஜிபுர் ரஹ்மான், பைரூஸ் ஹாஜியார் ஆகியோரை கொழும்பு மாநகர சபை அமைப்பாளராக நியமித்த போதிலும் பெரும்பான்மைப் பலத்தைப் பெற முடியவில்லை. இது ஐக்கிய தேசியக் கட்சி மக்களிடையே ஆதரவை இழந்து வருவதையே காட்டுகின்றது.

நான் மேயர் பதவிக்கு ஆசைப்பட்டு கட்சியிலிருந்து விலகவில்லை. சஜித் பிரேமதாசவை கட்சியின் தலைவராக நியமிக்கும் போராட்டத்தின் விளைவாகவே ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறினேன்.

என்னுடன் ரணிலுக்கு நேரடி விவாதம் ஒன்றில் கலந்து கொள்ளுமாறு சவால் விடுக்கின்றேன். அதன்போது அவருடைய ஊழல் மற்றும் திருட்டு செயற்பாடுகளை வெளிக்கொண்டு வருவேன்.

நான் வெறும் இரண்டு வாரங்கள் மாத்திரமே எனது தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டேன். எனினும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளேன். இது மக்கள் என் மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகின்றது எனத் தெரிவித்தார்.

## கிணற்றில் தவறிவீழ்ந்து குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

குடும்பப் பெண் கிணற்றில் தவறிவீழ்ந்து மரணமானார். சீலாப்புலம் கெருடாவில் கிழக்கில் வசித்துவந்த 5 பிள்ளைகளின் தாயாரான ஸ்ரீதாஸ் ஈஸ்வரி (வயது - 39) என்பவரே மரணமானவராவார்.

சம்பவ இடத்திற்கு சென்று மரண விசாரணை அதிகாரி மற்றும் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். (116)

## பாம்பு தீண்டியது

(யாழ்ப்பாணம்)

புடையன் பாம்பு தீண்டி குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை மறவன்புலோ பகுதியில் 4.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ராஜேந்திரபிரசாத் (வயது - 38) என்ற குடும்பஸ்தரே யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# கொரிய மொழித் தேர்ச்சி; பெறுபேறு 28 இல் வெளிவரும்

(கொழும்பு)

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையின் பெறுபேறுகள் இம்மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

பரீட்சை இடம்பெற்றபோது முறைகேடான வகையில் பரீட்சை எழுதிய குற்றத்திற்காக 21 பரீட்சார்த்திகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

சுமார் 50 ஆயிரம் பரீட்சார்த்திகள் பங்குபற்றிய கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சை கொழும்பு மாவட்டத்தில் 10 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தரம் குறைந்த பெற்றோல் நஷ்டஈடு இன்று வழங்கல்

(கொழும்பு)

தரம் குறைந்த பெற்றோலினால் பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்கள் நூற்றுக்கும் அதிகமானோருக்கு இன்று நஷ்டஈடு வழங்கப்படும் என பெற்றோலியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கை நவம்பர் 15 ஆம் திகதி பூர்த்தியாக்கும் எனவும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது. நஷ்ட ஈடு பெறுவதற்கான விண்ணப்பங்களை செப்டெம்பர் 5 ஆம் திகதிவரை அமைச்சு ஏற்றுக்கொண்டிருந்தது.

நஷ்டஈடு பெற தகுதிபெற்றோருக்கு பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இடம், திகதி என்பன அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

# சான்றிதழ்கள் மீளப்பெறுதல்

(யாழ்ப்பாணம்)

தொலைந்துபோன க.பொ.த (சாதாரணம்) க.பொ.த (உயர்தரம்) சான்றிதழ்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

சான்றிதழ்கள் பெற விரும்புபவர்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பரீட்சையின் பெயர், வருடம், பாடசாலையின் பெயர், முகவரி, வலயம், சுட்டெண் (தெரிந்திருந்தால்) ஆகிய விபரங்களை colombo lac@gamil.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது Legal manager, Legal aid commision of Srilanka. No 129, High court complex, Hulfsdorp street colombo 12 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் 'சான்றிதழ்கள் மீளப் பெறுதல்' எனக் குறிப்பிடவும். மேலும் 0113137153 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

இந்திய அரசின் நிதியுதவியுடன் 326 மில்லியன் ரூபா செலவில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயம் புனரமைக்கப்படவுள்ளது. இந்தப் புனரமைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றைய தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்னிலையில் இடம்பெற்ற இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா சார்பில் தூதுவர் அசோக் கே.காந்தா, ஆலயம் சார்பாக ஆலய பரிபாலன சபைத தலைவர் வி.கைலாசபிள்ளை ஆகியோர் கைச்சாத்திட்டனர்.


இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர், இந்து சமய திணைக்களப் பணிப்பாளர், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# புனர்வாழ்வளிக்கப்பட்ட 367 பேர் தீபாவளி தினத்தில் விடுதலை

புனர்வாழ்வளிக்கப்பட்ட 367 முன்னாள் புலி உறுப்பினர்கள் தீபாவளியை முன்னிட்டு விடுவிக்கப்படவிருப்பதாகச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எம். எஸ். சதீஸ்குமார தெரிவித்தார். மனிதாபிமான நடவடிக்கையின்போது பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் 11 ஆயிரத்து 699 பேரில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் விடுவிக்கப்பட்டு, சமூகத்துடன் இணைக்கப் பட்டிருகின்றனர். இதன் அடுத்த கட்டமாக 367 பேர் தீபாவளி தினததன்று விடுவிக்கப்படவுள்ளனர். அன்றைய தினம் அவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வை கொழும்பில் நடத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டார். புனர்வாழ்வளிக் கப்பட்ட ஆயிரத்து எண்ணூறு பேர் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். எஞ்சியுள்ளவர்களை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கன

# வடக்கிற்கென தனித்துவமாக இருக்கும் தேசவழமைச் சட்டத்தை நீக்க வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கிற்கு தனித்துவமாக அமுலிலிருக்கும் பயங்கரவாத கொள்கைகளுக்குத் துணை போகும் தேச வழமைச் சட்டத்தை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும். வடக்கில் மாவீரர் குடும்பங்கள் ஆக்கிரமித்துள்ள காணிகளையும் அரசாங்கம் காலதாமதமின்றி சுவீகரிக்கவேண்டும் என்று அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக தெரிவித்தார்.

வடக்கில் 40 ஆயிரம் சிங்களக குடும்பங்கள் வாழ்ந்திருந்தனர். இவர்களின் காணிகளை புலிகளே சுவீகரித்து மாவீரர் குடும்பங்களுக்கு கொடுத்தனர். தற்போது நாட்டிற்கு இருப்பது ஒரு சட்டம் மாத்திரமேயாகும். இதனடிப்படையில் யாரும் எங்கும் வாழலாம். எனவே கூட்டமைப்பினர் வீண் பிரச்சினைகளை தூண்டி விட முயற்சிக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக தொடர்ந்தும் கூறுகையில்,

தேசிய சட்டக் கோவையின் பிரகாரம் அனைவருக்கும் சமமாக சட்டங்கள் அமுலாக்கப் பட வேண்டும். ஒரு தனி இனத்திற்கோ அல்லது பிரதேசத்திற்கோ தனித்துவமான சட்டங்கள் காணப்பட முடியாது. வெள்ளையர்கள் ஆட்சியில் பிரிவினைவாதத்திற்கும் பயங்கரவாதத்திற்குமான சட்ட ஆதாரமாக தேசவழமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனை இன்று நடைமுறையில் வைத்துக்கொள்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறினார்.

## சிறுவன் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தற்கொலை செய்து கொண்டார். 13 வயதுடைய அரியதாஸ் கிரிசாந்தன் எனும் இச்சிறுவன் வீட்டில் ஏற்பட்ட சிறு பிரச்சினைக்கு மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதாகத் தெரியவருகிறது. (எஸ்)

## குடிநீர் விநியோகம்

யாழ். கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு யாழ். மாநகரசபையினர் பௌசர்கள் மூலம் குடிநீரை வழங்கிவருகின்றனர். குழாய் மூலம் வழங்கப்பட்ட நீர் போதாது என சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (26)

# புராதன பொருட்களைத் திருடிய முன்னாள் இராணுவ அதிகாரிக்கு சிறை

(கொழும்பு)

பொல்பித்திகமவிலுள்ள பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதியிடமிருந்து புராதனப் பொருட்களை திருடிய குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட ஓய்வு பெற்ற இராணுவ லெப்டினன்ட் ஒருவருக்கு மாஹோ நீதவான் நீதிமன்றம் 2 வருட கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

குற்றம் சுமத்தப்பட்ட பி.ஏ. புஷ்பகுமார ஜயவர்தன எனும் இந்த இராணுவ லெப்டினன்டுக்கு 2 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இதற்கு முன்னரும் இதே போன்ற குற்றச்சாட்டுகளில் இவர் குற்றவாளியாக காணப்பட்டதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இவ்விவகாரத்தில் தொடர்புபட்ட வர்த்தகர் ஆர்.எம்.தனஞ்ஜய, ஆர்.ஜி.சுமித் ஜயசோம ஆகியோருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரு வருடகால கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.